Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :164 சித்திரை 24ஆம் நாள் வியாழக்கிழமை 07 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051




## மீண்டும் ஊரடங்கு

யாழ்ப்பாணம், மே 7

நாடளாவிய ரீதியில் நேற்று இரவு எட்டு மணி முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக 02

# எதிர்க்கட்சியினரை விட புலிகள் மேலானவர்கள்

'அந்தர்பல்டி' அடிக்கிறார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, மே 7

சுனாமி உள்ளிட்ட இடர் வேளைகளில் விடுதலைப் புலிகள் அரசுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தவில்லை. இதனால்தான் அன்றைய காலத்தில் அரசால் மீட்பு நடவடிக்கைகளையும் ஏனைய இடர்கால நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடிந்தது. ஆனால் தற்போதைய எதிர்க்கட்சியினர் அப்படியல்லர் இவ்வாறு தெரிவித்துள்ளார் வாசுதேவ நாணயக்கார. 02

## ஆனோல்ட் படங்களை அகற்றுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்டின் படங்கள் அரச அபிவிருத்தித் திட்டங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அகற்றுமாறு தேர்தல்கள் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ. ஆனோல்ட் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர். 02

## அபிவிருத்தியை வைத்து தேர்தல் ஆதாயம் தேடும் அரசியல்வாதிகளுக்கு ஆப்பு!

யாழ்ப்பாணம், மே 7

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களின் ஒளிப்படங்களை அகற்றுவதற்கு அல்லது மறைப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் திணைக்களத்தால் பிரதேச செயலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க.மகேசனால் பிரதேச செயலர்களுக்கு நேற்று 02

## நேற்று கொரோனா இன்று சுகதேகிகள்! மக்களைக் குழப்பும் சுகாதாரத்துறை

கொழும்பு, மே 7

கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட தேசிய மருத்துவம 02

## கொரோனாவால் உயிரிழந்த பெண்ணின் குடும்பத்துக்கு தொற்றில்லை

கொழும்பு, மே 7

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிப்படைந்து கொழும்பு 15, மோதரையில் நேற்று முன்தினம் உயிரிழந்த பெண்ணின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எவருக்கும் தொற்று இல்லை என நேற்று நடைபெற்ற பி.சி.ஆர் பரிசோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளது. 02

## கொரோனா 797 நேற்று 26 பேர்

கொழும்பு, மே 7

இலங்கையில் நேற்று மட்டும் 26பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 797ஆக 02

## பலாலியில் ஒருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், மே.7

யாழ்.போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளின் முடிவில், பலாலி தனிமைப்படுத்தல் முகாமில் இருந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி 02

## நுங்கு வெட்ட ஏறியவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

புதுக்குடியிருப்பு, மே 7

நுங்கு வெட்டுவதற்காக பனை மரம் ஏறிய குடும்பத் தலைவர் தவறி விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். புதுக்குடியிருப்பு மதுவில் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் ரவிசங்கர் (வயது 26) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 02

## பல்கலையில் பாதுகாப்பாகவே சோதனை!!

வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர் பீடாதிபதி மற்றும் மருத்துவமனைப் பணிப்பாளர்



யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் உலக சுகாதார நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றியே கொரோனாத் தொற்றுச் சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆய்வுகூடத்தில் எந்தவித தொற்றும் ஏற்படவில்லை. ஒரு சிலர் தமது 02

## கே.கே.எஸ்ஸில் தனிமைப்படுத்தப்பட்ட நால்வர் வீட்டுக்கு!

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணம் பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த 4 பேரும் பரிசோதனைகளின் பின்னர் தத்தமது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்தார். 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்க்கட்சியினரை....

சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பரவலைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விமர்சிப்பதன் மூலம் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து அரசியல் இலாபம் தேடிக்கொள்கின்றனர். சுனாமி உள்ளிட்ட இடர் வேளைகளில் புலிகள் அரசுக்கோ இராணுவத்துக்கோ எதிராகத் தாக்குதல் நடத்தவில்லை. அவரவர் தரப்பில் மேற்கொள்ளக்கூடிய இடர்கால நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொண்டனர். இதனால் அது நல்ல பய னைத் தந்தது. நெருக்கடி நேரத்தில் புலி கள் செயற்பட்டதைப் போன்று தற்போதைய எதிர்க்கட்சியினர் செயற்படவில்லை. இவர்களின் செயற்பாடு சுயநலப் போக்கில்தான் உள்ளது - என்றார். (ம)

## மீண்டும்.....

மார்ச் 20ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், எதிர்வருகின்ற நாட்களில் வெசாக் மற்றும் வார இறுதி விடுமுறை தினங்கள் வருவதினால், மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் வகையில் மீண்டும் தொடர் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 11ஆம் திகதி முதல், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய நான்கு மாவட்டங்களில் நடைமுறையில் உள்ள நிலையிலேயே, அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில், தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி வெளியே செல்லும் நடைமுறை எதிர்வரும் 11ஆம் திகதியிலிருந்தே ஆரம்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆனோல்ட்

வேட்பாளர் ஒருவரின் படத்தை அரசின் அபிவிருத்தித் திட்டங்களில் காட்சிப்படுத்த முடியாது. அதற்கு அமைவாகவே, யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய கட்டட அபிவிருத்திப் பணி மேற்கொள்ளப்படும் இடத்தில் அமைந்துள்ள ஆனோல்டின் படத்தை அகற்றுமாறு தேர்தல்கள் திணைக்களம் பணித்துள்ளது. (ஒ.5)

## உயிரிழந்த....

எனினும், அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுத் தொடர்ந்து கண்காணிக்கப்படுவார்கள் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. உயிரிழந்த குறித்த பெண்ணுக்குக் கொரோனா சமூகத் தொற்று வழியாகப் பரவியிருக்கலாம் எனப் பலரும் சந்தேகம் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-22)

## பல்கலையில்....

சுயநலத்துக்காக பிழையான தகவல்களை வெளிப்படுத்தி மக்களையோ, பல்கலைக்கழக ஊழியர்களையோ, மருத்துவபீட மாணவர்களையோ பயப்பீதிக்கு உள்ளாக்கக் கூடாது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதியும் சத்திரசிகிச்சை நிபுணருமான எஸ்.ரவிராஜ் ஆகியோர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும், ஆய்வுகூடத்தில் தொற்று ஏற்பட்டமை காரணமாகவே இவை நடைபெறவில்லை என்றும் சில இணையத்தளங்கள் மற்றும் ஓர் அச்சு ஊடகத்தில் செய்தி வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மதியம் இடம்பெற்றது.

பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வழமை போன்று இன்று (நேற்று)பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும். இரண்டு இடங்களையும் சேர்த்து ஒரு நாளில் 100 சோதனைகளை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். சோதனைகள் மிகவும் சரியான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவபீட ஆய்வுகூடத்தில் தொற்று ஏற்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. அப்படி எதுவும் இடம்பெறவில்லை, என்றார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி எஸ்.ரவிராஜ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு தினங்கள் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டிருந்தன. எமது பீடத்திலுள்ள ஆய்வுகூடத்தில் சோதனை ஆரம்பித்த சில நாள்களிலேயே நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தோம். தொற்று தொடர்பாக பரிசோதனைகள் இடம்பெறும் ஆய்வுகூடத்துக்கு, அருகிலுள்ள மாணவர் ஆய்வுகூடத்திலுள்ள குளிரூட்டிகள் இரண்டைக் கொண்டு வர வேண்டிய தேவை ஏற்பட்டது.

இரண்டு குளிரூட்டிகளும் மைனஸ் 80 மற்றும் மைனஸ் 30 ஆகிய வெப்பநிலைகளில் இயங்குகின்றன. இதன் காரணமாக அந்த குளிரூட்டிகள் வெப்பமடைகின்றன. வெப்பமடைவதால் அவற்றைத் தொடர்ந்து நீண்ட கால நோக்கில் இயக்குவது கடினம். எனவே இரண்டு குளிரூட்டிகளையும், குளிரான நிலைமை காணப்படும் எமது ஆய்வு கூடத்தில் வைக்க வேண்டிய தேவை இருந்தது. ஆய்வு கூடத்துக்கான கதவின் ஊடாக அதனைக் கொண்டு செல்ல முடியாது.

எனவே ஆய்வு கூடத்தின் கதவை பெரிதாக்கும் பணிகளை ஆரம்பித்தோம். கடந்த இரண்டு நாள்களாகப் பல்கலைக்கழகத்தில் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காகவே பல்கலைக்கழகத்தில் சோதனை நடவடிக்கைகளை இரண்டு நாள்கள் நிறுத்தியிருந்தோம். இன்றிலிருந்து (நேற்றிலிருந்து) சோதனைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.

ஆனால் ஒரு சில ஊடகங்கள் ஆய்வு கூடத்தில் தொற்று பரவியமை காரணமாக சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக வதந்திகளைப் பரப்பியுள்ளனர். எமது ஆய்வுகூடத்தில் எந்தவொரு தொற்றும் ஏற்படவில்லை. நூறு வீதம் பாதுகாப்பாகவே முன்னெடுக்கப்படுகின்றது. எமது ஆய்வுகூடத்தில் சோதனை செய்பவர்கள் தங்களுக்கு தொற்று ஏற்பட விரும்புவார்களா? அல்லது யாராவது விரும்பு வார்களா? எல்லா விடயங்களும் பாதுகாப்பாகவே நடக்கின்றன.

இப்படி வதந்திகளைப் பரப்புவதன் காரணமாக பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என்று எல்லோரும் பயப்படுவார்கள். தயவு கூர்ந்து பொய்யான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டாம். என்றார். வதந்திகளைப் பரப்பி ஒரு சிலர் பிழையான நோக்கோடு செயற்படுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி குறிப்பிட்டார். (ஒ.5)

## தேர்தல் ஆதாயம்...

மதியம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் தேர்தல் காலத்தில் வேட்பாளர்களின் ஒளிப்படங்கள் அவர்களின் பெயர்களைக் காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்ட நடவடிக்கையாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தினுள் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அமைக்கப்பட்ட பல்வேறு பதாகைகளில் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் நபர்களின் ஒளிப்படங்கள் மற்றும் பெயர்கள் காணப்படுவதாகத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மேற்படி பதாகைகள் தங்கள் பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்பட்டால் அவற்றை அகற்றுவதற்கோ அல்லது கறுப்பு பொலித்தீன் மூலம் மறைப்பதற்கோ தங்கள் பிரிவு பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டிருந்த வேட்பாளர் இராமநாதன் அங்கஜனின் கட்டவுட் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## நேற்று கொரோனா...

சேர்ந்த போதைப்பொருள் பாவனையாளர் ஆகியோருக்கு நேற்று மீண்டும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது கொரோனா தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க நேற்று மாலை தெரிவித்தார். இதற்கமைய, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் பட்டியலிருந்து இவர்கள் மூவரினதும் பெயர்களை நீக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயினும் எப்படி குறித்த மூவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படிருப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது? என்பதற்கான விளக்கமெதனையும் அவர் தெரிவிக்கவில்லை. இவ்வாறு நேற்று கொரோனாத் தொற்றாளர்களாக அறிவிக்கப்பட்ட மூவரும் , இன்று சுகதேகிகள் எனச் சொல்லப்படுவதால் மக்களிடையே கொரோனாச் சோதனைகள் தொடர்பில் பெரும் சந்தேகம் எழுந்துள்ளது. (ம-22)

## நுங்கு....

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

புதுக்குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் குறித்த குடும்பத்தலைவர் கடந்த 25ஆம் திகதி நுங்கு வெட்டுவதற்காகப் பனை மரத்தில் ஏறியுள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக கால் இடறி கீழே விழுந்து படுகாயம் அடைந்துள்ளார். அவர் உடனடியாக புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அன்றையதினமே மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)

## கொரோனா 797

அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து இதுவரை 215 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தொற்றுக்குள்ளாகியவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 573 நோயாளிகள் 7 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம22)

## பலாலியில்....

செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவலை யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

" நேற்று 68 பேருக்கு யாழ்.போதனா மருத்துவமனையில் பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களில் 67 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கவில்லை. எனினும் பி.சி.ஆர் சோதனைகளின் முடிவில் , பலாலி தனிமைப்படுத்தல் முகாமி இருந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. " என்று அவர் தெரிவித்துள்ளார். இருப்பினும் பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்து , கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக உறுதி செய்யப்பட்ட நபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரா அல்லது வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவரா என்பது குறித்து தெரியவரவில்லை. (அ)

## தனிமைப்படுத்தப்பட்ட...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மதியம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த முதலாம் திகதி நடத்தப்பட்ட பரிசோதனையில்அவர்களுக்குகொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில் அவர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து தத்தமது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். வீடுகளில் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் அவர்கள் இருக்க வேண்டும், என்றார். (ஒ.5.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோர், மாற்றுவலுவுள்ளோருக்கு திங்கள் கொடுப்பனவு

சாவகச்சேரி மே.7

தென்மராட்சிப் பிரதேச 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனளிகளுக்கான மே மாத கொடுப்பனவு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்த கிராம அலுவலர்களால் வழங்கப்பட்டவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இந்தக் கொடுப்பனவுகள், முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு தேடி வந்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது . (ப-9)

## கொரோனாவை அழிக்கும் கருவிக்கு ரூபா 800 கோடி!

கொழும்பு, மே 7

கொரோனா கிருமித் தொற்றுத் தொடர்பான ஆராய்ச்சிகளை நடத்தி அதற்கான சிகிச்சைகளை அளிப்பதற்கும் அதனைத் தடுப்பதற்கும் தேவையான கருவிகளை உருவாக்குவதற்கு உலகத் தலைவர்கள், சர்வதேச ஸ்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் 7.4 பில்லியன் யூரோக்களை ( 800 கோடி ) வழங்குவதாக உறுதி அளித்துள்ளனர்.

இதனை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தால் திங்களன்று இணையத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் 40 நாடுகள் கலந்து கொண்டன. இந்தக் கூட்டத்தின்போது திரட்டப்பட்ட தொகை உரிய இலக்கைவிட சற்று குறைவாக இருந்தபோதிலும் அடுத்துவரும் தினங்களில் மேலும் நிதி வழங்குவதற்கான உறுதிப்பாடுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிதி கொவிட் - 19 தடுப்பு நடவடிக்கைகளின் ஆரம்பத் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படும் என உலகத் தலைவர்கள் தெரிவித்தனர். நிதியானது தனிச் சிறப்புவாய்ந்த உலகளாவிய ஒத்துழைப்பை ஆரம்பிக்க உதவும்' என ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் ஊர்சுலா வொன் டேர் லெயென் தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒத்துழைப்புக்கான அழைப்பை ஆதரிப்பதாகத் தெரிவித்த உலகத் தலைவர்கள், கொவிட் 19 தடுப்பு நடவடிக்கைகளுக்கு மிகவும் அவசியமான கருவிகளை உருவாக்குவற்கான அணுகுமுறைகளை ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டனர். அத்துடன் ஆராய்ச்சி, விருத்தி, அனுமதி ஆகியவற்றையும் தடுப்பு மருந்து மற்றும் உயிர்காக்கும் மற்றும் நோயை கண்டறிவதற்கான சிகிச்சை முறைகளையும் விரைவுபடுத்துவதற்கு உலகளாவிய ஒத்துழைப்புக்கான தளம் ஒன்றின் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.


'முழு உலகத்துக்காகவும் உலகத்தால்; தயாரிக்கப்படும் ஒரு தடுப்பு மருந்தை (தடுப்பூசி) எம்மால் விருத்தி செய்யக் கூடுமானால் அது 21ஆவது நூற்றாண்டில் ஒரு தனித்துவமான பொது நன்மையைப் பயக்குவதாக அமையும். அந்தத் தடுப்பூசி அனைவருக்கும் இலகுவாக, மலிவு விலையில் கிடைக்கச் செய்வதற்கு எமது பங்காளிகளுடன் இணைந்து அர்பணிப்புடன் செயற்படுவோம்' என அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

# கழிவுகளாகும் மாஸ்க் பிரச்சினையாக உருவெடுக்கும்

### சுற்றுச்சூழல் பாதுகாப்பு சபையின் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 7

கழிவுகளாக அகற்றப்படும் முகக் கவசங்கள், எதிர்காலத்தில் பாரியதொரு சுற்றுச்சூழல் பிரச்சினையாக உருவெடுக்குமென, கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி தர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பாக, தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் முகக் கவசங்கள், பெரும்பாலும் ஒருமுறை மாத்திரமே பயன்படுத்தப்பட்டு, அகற்றப்படுகின்றன. இவ்வாறு அகற்றப்படும் முகக் கவசங்களினால் ஏற்படும் பிரச்சினை பாரதூரமானது. தற்போது இவ்வாறு அகற்றப்படும் அதிகளவான முகக் கவசங்கள் ஆங்காங்கே இருப்பதை அவதானிக்க முடிகிறது. அவற்றை சாதாரண குப்பைகளுடன் சேர்த்து அகற்றாது, அவற்றை அகற்ற தனியான முறையை ஏற்படுத்த வேண்டும். வீடுகளில் பயன்படுத்தப்பட்டு அகற்றப்படும் முகக் கவசங்களை எரிக்க வேண்டும்.

அல்லாவிடின், அவற்றை சுகாதாரமான முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இல்லையெனின், சுற்றுச்சூழலில் அகற்றப்பட்ட முகக் கவசங்கள், மழை காலத்தில் நீரோட்டத்துடன் சேர்ந்து கடல் நீரினுள் கலந்து விடுவதற்கான வாய்ப்புக் காணப்படுவதோடு, கடற்கரையோரங்களில் கரையொதுங்கவும் வாய்ப்புக் காணப்படுகின்றது.

தற்போது பல ஐரோப்பிய நாடுகளின் கடற்கரையோரங்கள் இதன் காரணமாக நாசமடைந்துள்ளது- என்றார் (ப)

## தப்பிக்க கடலில் பாய்ந்த இளைஞன் சடலமாக மீட்பு

மூதூர், மே 7

சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்த இருவரில் ஒருவர் தப்பிப்பதற்காக கடலில் பாய்ந்த நிலையில் காணாமல் போய், பின்னர் சடலமாக மீட்கப்பட்டார். மணல் ஏற்றிக்கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் சத்தத்தை கேட்டு, வருபவர்கள் பொலிஸார் எனக் கருதி குறித்த இளைஞன் கடலில் பாய்ந்தான் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சோலை வெட்டுவான் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது

கிண்ணியா 03 மதினா நகர் யுனைதீன் பாஹீம் (வயது 21) என்னும் இளைஞனே இவ்வாறு காணாமல் போய், இரவு நீரேந்து பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

இளைஞன் காணாமல் போன போது, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரும் , கடற்படையினரும் கடலில், தேடுதல் மேற்கொண்டனர் எனினும் இளைஞன் சிக்கவில்லை. அன்றையதினம் இரவு சடலமாக மீட்கப்பட்டான் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ப-40)

## அபிவிருத்தி வேலைகள் முடிந்தும் இதுவரை நிதி கிடைக்கவில்லை

### மன்னார் தவிசாளர் ஜனாதிபதிக்கு கடிதம்

மன்னார், மே 7

மன்னாரில் கடந்த ஆண்டு (2019) மன்னார் மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கும்படி பணிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டும் அதற்கான நிதி இன்னும் ஒப்பந்தக்காரர்களுக்கு கிடைக்கவில்லையென தெரிவித்து மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

மன்னார் மாவட்டம் போரால் பாதிப்படைந்த ஒரு பிரதேசம். இதை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அரசியல்வாதிகளுக்கும் இருக்கின்றது. இதற்கமைய கடந்த ஆண்டு 2019 இவ் பிரதேசத்துக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை கிராம மட்டத்தில் முன்னெடுக்கும்படி பணிக்கப்பட்டிருந்தோம். மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் எங்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க கடந்த ஆண்டு நாங்கள் கிராமிய மட்டத்திலான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தோம். அதுவும் கடந்த ஆண்டு பத்தாம் மாதம் இவ் வேலைத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் நாங்கள் பணிக்கப்பட்டிருந்தோம். இதற்கமைய பல கிராமிய அமைப்புக்கள் பல சிரமத்தின் மத்தியில் இவ் வேலைத்திட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளன. கடன்பட்டு தங்கள் நகைகளை வங்கிகளில் அடகு வைத்தே இவ் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் சென்றுள்ளனர். இதற்கமைய கடந்த ஆண்டு (2019) மன்னார் பிரதேச சபை உட்பட நகர சபை மற்றும் மன்னார் மாவட்ட பிரதேச சபைகளில் 50 அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் 172 மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றது. செலவழிக்கப்பட்ட இதற்கான நிதிகளை வழங்கும்படி பிரதேச செயலகத்தினூடாக மன்னார் மாவட்டச் செயலருக்கு விண்ணபிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான நிதி இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் இருப்பதால் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறேன்- என்றுள்ளது. (ப-60)

# தனிமைப்படுத்தல் நிறைவு: ஊர் திரும்பும் 226 மாணவர்

கொழும்பு, மே 7

பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய இலங்கை மாணவர் குழுவினர் உட்பட 226 பேர் கட்டாய தனிமைப்படுத்தல் நடைமுறைகளை வெற்றிகரமாக முடித்துள்ள நிலையில் அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாடு முழுவதும் 39 சிறப்பு தனிமைப்படுத்தல் நிலையங்களில் மொத்தமாக 4,882 பேர் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக கொவிட் 19 எதிர்பாரா பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும், பாதுகாப்பு தலைமை பிரதானியும், இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதுதவிர இதுவரை மொத்தமாக 8,156 நபர்கள் தனிமைப்படுத்தல் நடைமுறைகளை பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டவிரோத மது விற்பனை உரும்பிராயில் மூவர் கைது

*91 மதுப் போத்தல்கள் மீட்பு*

யாழ்ப்பாணம், மே 7

உரும்பிராய் பொக்கணை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனை செய்த குற்றச்சாட்டில் நேற்றுமாலை மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 91 போத்தல் சாராயம் மீட்கப்பட்டது.

உரும்பிராய் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றது என்று கோப்பாய் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பி லேயே மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டனர். (ம-20)

## மே 11ஆம் திகதி முதல் கடும் கட்டுப்பாடுகளுடன்

# இயல்பு நிலைக்கு திரும்பும் இலங்கை

கொழும்பு, மே 7

**கொரோனா வைரஸ் தாக்கத்தைக் குறைக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் நடைமுறையில் ஊரடங்கை எதிர்வரும் 11ஆம் திங்கட்கிழமை கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளுடன் தளர்த்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணித்துள்ளார்.**

கொரோனா அபாய வலயங்களாகக் கருதப்படும் மாவட்டங்களில் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய மக்கள் செயற்படவேண்டும் எனவும், அதற்கான வேலைத்திட்டங்களை சுகாதார அதிகாரிகள் முன்னெடுக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். அதற்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் சுகாதார அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினமும் நேற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணி உறுப்பினர்களுடன் ஜனாதிபதி நடத்திய பேச்சுகளின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் நிபுணர் அனில் ஜாசிங்க கூறுகையில்,

"நேற்று புதன்கிழமை 8 மணியிலிருந்து எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5 மணி வரையில் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு நடைமுறையில் இருக்கும். இந்த வாரம் வெசாக் வாரமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாரத்தின் இறுதி நான்கு நாட்கள் தொடர்ச்சியான விடுமுறை தினங்களாக உள்ள காரணத்தினாலும் மக்களின் அநாவசிய செயற்பாடுகளைக் குறைக்கும் விதத்திலும் இந்த ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தின்போதும் இந்த வாரம் கடுமையான சுகாதார கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு தளர்க்கப்படும். எனினும், இவ்வாறு தளர்க்கப்படும் ஊரடங்கு காலத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் மக்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் என்ன என்பது அறிவிக்கப்படும். குறிப்பாக ஊரடங்கு தளர்வு காலம் குறிப்பிட்ட நேரம் வரையில் வழங்கப்படும். நாள்தோறும் காலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்க்கப்பட்டு மீண்டும் இரவு 8 மணிக்கு நடைமுறைக்கு வரும். எனினும், அதிக முக்கியத்துவம் கொடுத்து அவதானிக்கப்படும். கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஊரடங்குத் தளர்வு காலம் குறைக்கப்படலாம். ஏனைய மாவட்டங்களில் தற்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை தொடர்ந்தும் பின்பற்றப்படும்.

தற்போது ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள மாவட்டங்களில் நாளாந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள், அத்தியாவசிய நிறுவனங்கள், விவசாய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இந்தத் தளர்வு காலத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தமது வேலைப்பணிகளை ஆரம்பிக்க முடியும். ஆனால், நிறுவனத் தேவைக்கேற்ற ஊழியர்களை மாத்திரம் வரவழைத்துப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றது.

அத்துடன் பொதுப்போக்குவரத்து சேவைகளும் கடுமையான கட்டுப்பாடுகளுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். பஸ்களில் பயணிக்கும் வேளைகளில் ஆசனங்களுக்கு ஏற்ப மக்களைக் கொண்டுசெல்ல வேண்டும். அத்துடன் திரையரங்குகள் திறக்க இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்த எந்தவித தீர்மானமும் இன்னமும் எடுக்கப்படவில்லை. மாணவர்களை இப்போது பாடசாலைகளுக்கு அனுமதிப்பதில் சில சிக்கல்கள் உள்ளதைக் கருத்தில் கொண்டே சுகாதார அதிகாரிகள் இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதியிடம் அறிவித்துள்ளனர். தொற்றுநீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதேபோல் மேலும் ஒரு சில வாரங்கள் நிலைமைகளை அவதானித்து அதன் பின்னர் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். (ம22)

## கிளி. நீதிமன்றின் முன்னால்

# சமூக இடைவெளியின்றி பெரும் மக்கள் கூட்டம்!

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றுக்கு முன் கடந்த சில நாள்களாக பொதுமக்கள் சமூக இடைவெளியைப் பின்பற்றாமல் ஒன்றுகூடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் கடமையில் ஈடுபடும் பொலிஸார், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததையிட்டு பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். சமூக இடைவெளியின்றி ஒன்றுகூடியவர்களில் பலர் முகக் கவசம் அணியவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## கொரோனாத் தொற்றை

# இயற்கையை உணர்வதற்கு ஆதாரமாகக் கொள்ளுங்கள்

## பிரதமர் மஹிந்த அறிவுரை


கொழும்பு, மே 7

கொரோனாத் தொற்றை இயற்கையை உணர்வதற்கான ஆதாரமாக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அலரி மாளிகையில் பௌத்த மதத் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற உரையாடலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அவர்.

இந்தக் கலந்துரையாடலில் மஹிந்த மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தொற்றை இயற்கையை



உணர்வதற்கான ஆதாரமாகக் கொள்ளுங்கள். இயற்கையை எவராலும் வெல்ல முடியாது. இயற்கையை மாற்றுவதாகக் கூறியவர்கள் இன்று இயற்கைக்கு எதிராக மண்டியிட வேண்டியுள்ளது - என்றார். (ம)


# கசிப்பால் மோதல் இருவர் படுகாயம்!

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஏற்பட்ட போட்டி காரணமாக இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில் இரு குழுக்கள் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளன. தமது வியாபாரம் தொடர்பில் இந்த இரண்டு குழுக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. மோதலில் இருவர் படுகாயமடைந்தனர். அவர்கள் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த அசம்பாவிதம் தொடர்பில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-113)



## மின்னல் தாக்கத்தால்

# இரணைமடுக் குளத்தின் துருசின் கோபுரம் சேதம்

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி இரணைமடு குள வலதுகரை துருசின் கோபுரம் மின்னல் தாக்கத்தால் நேற்றுச் சேதமடைந்தது.

இரணைமடு பாய்ச்சல் பிரதேசத்தில் நேற்றுக் கடும் இடி மின்னலுடன் கனதியான மழைவீழ்ச்சி பதியப்பட்டுள்ளது. இதன்போதே கிளிநொச்சி இரணைமடு குள வலது கரை துருசின் கோபுரம் மின்னல் தாக்கத்தால் சேதமடைந்தது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்கள் பதிவு செய்யவும்

கிளிநொச்சி, மே 7

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு நிதிப் பங்களிப்பை வழங்க கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்வந்துள்ளது. இதற்கமைய பாடசாலை ஆசிரியர்களின் மே மாத சம்பளத்தில் இருந்து ஒரு நாள் சம்பளத் தொகையை கொரோனா நிதிப் பங்களிப்பாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு சம்மதம் தெரிவிக்கின்ற ஆசிரியர்கள் தமது விவரங்களை 0767765679 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு நாளை 8 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு பாடசாலை அதிபர் கி.விக்னராஜா அறிவித்துள்ளார். (ஐ-159)

## வெசாக்கை முன்னிட்டு முத்திரைகள் வெளியீடு

கொழும்பு, மே 7

இவ் ஆண்டின் வெசாக் பண்டிகையை முன்னிட்டு, மூன்று நினைவு முத்திரைகளை வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முத்திரைகள் வெளியிடும் நிகழ்வு, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையின் அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளது. அதன்படி தபால் திணைக்களம் 10, 15 மற்றும் 45 ரூபா பெறுமதியுடைய முத்திரைகளையே இவ்வாறு வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளது. இன்றும், நாளையும், வெசாக் பௌர்ணமி தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 4 ஆம் திகதி முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி வெசாக் வாரமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ப)

## கொரோனாவால் இறந்த பெண்ணின் கணவர் பேக்கரி உணவுகள் விற்பனையாளர்

கொழும்பு, மே 7

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்த பெண்ணின் கணவர் முச்சக்கர வண்டியில் பேக்கரி உணவுகள் விற்பனை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இதுவரையில் கொரோனா நோயாளிகள் பதிவாகாத கொழும்பின் 4 இடங்களில் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மோதர மெத்த வீட்டுத் தொகுதியில் பதிவாகிய பெண் ஒருவர் ஐ.டி.எச் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது எவ்வாறு என்ற விசாரணைகள் நடைபெறும் நிலையில் அவருடைய கணவர் முச்சக்கர வண்டியில் பேக்கரி உணவுகள் விற்பனை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# கொழும்பில் இறந்த பெண்ணுக்கு கொரோனா தொற்றியது எப்படி?

## இன்னும் தெரியவில்லை என்கிறார் சவேந்திர சில்வா

கொழும்பு, மே 7

**கொழும்பு 15, மோதரைப் பகுதியில் கொரோனாத் தொற்றுக் குள்ளாகி உயிரிழந்த பெண்ணுக்கு எவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லையெனத் தெரிவித்த இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அது குறித்து தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.**



கொழும்பு 15, முகத்துவாரம் மெத்சந்த செவன தொடர்மாடி குடியிருப்பில் வசிக்கும் 5 பிள்ளைகளின் தாயொருவர், மூச்சுத் திணறல் காரணமாக கடந்த திங்கட்கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு பி.சி.ஆர். எனும் கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அவருக்கு கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது. உடனடியாக அவர் அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், பெண்ணின் நிலை தீவிரமாக இருந்தது. உடனடியாகவே தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில், நேற்று முன்தினம் காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே இராணுவத்தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக்கு இலக்காகி நேற்றுமுன்தினம் உயிரிழந்த பெண்ணுக்கு தொற்று எவ்வாறு ஏற்பட்டது , யாரால் தொற்றுக்குள்ளானது என்பது பற்றி இதுவரை கண்டறியப்படவில்லை. எப்படியாயினும் அதனை ஆராய்ந்து கண்டறிவோம் என்று தெரிவித்தார் இராணுவத் தளபதி.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கொரானா தொற்றுக்குள்ளான 20 பேரில் 15 பேர் இலங்கை கடற்படை வீரர்கள். இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்கள் 771 பேரில் 348 பேர் கடற்படை வீரர்கள் என்றும் தெரிவித்தார். (ப)


## விபத்தில் சிறுவன் உயிரிழப்பு


மட்டக்களப்பு, மே 7

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள சின்னப்புல்லு மலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், 6 வயது சிறுவனொருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

நொச்சிமுனை தரிசனம் வீதியைச் சேர்ந்த 6 வயதுடைய றொபட் டினேஷ் ஹனபன் ஹொசேயா என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)







## மரக் கடத்தல்; இருவர் கைது

மட்டக்களப்பு, மே 7

வாழைச்சேனை வட்டார வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஓமடியாமடு காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், இரண்டு வாகனங்களும், முதுரை மரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று வாழைச்சேனை வட்டார வனவள உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

ஓமடியாமடு காட்டுப்பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே குறித்த சம்பவம் கண்டறியப்பட்டு, இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எட்டு அடி நீளம் மதிக்கத்தக்க ஒன்றரை லட்சம் பெறுமதியான பதின்மூன்று முதுரை மரக் குற்றிகளும், இரண்டு சிறிய ரக வாகனங்களும் கைப்பற்றப்பட்டன என்று வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார். (ப-150)

## அரசியல் பாகுபாடின்றி நிவாரணம் வழங்குங்கள்

### முன்னாள் சபாநாயகர் கரு சுட்டிக்காட்டல்

கொழும்பு, மே 7

தற்போதைய நெருக்கடியைக் குறைப்பதற்காக மிகவும் வறிய மக்களுக்கு எவ்வித அரசியல் பாகுபாடின்றி நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு பெரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இது குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் முன்னாள் சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் பகுதிகளில் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்படுகின்றார்கள். அதேவேளை தற்போதைய நெருக்கடியைக் குறைப்பதற்கு மிகவும் வறிய மக்களுக்கு எவ்வித அரசியல் பாகுபாடுமின்றி நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதேநேரம் கைத்தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்குரிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமாகும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியான நிலையில் கூட்டமைப்பு ஒத்துழைப்பு

## வரவேற்கின்றார் விமல்



கொழும்பு, மே 7

**'பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் நோக்கங்களை அடிப்ப டையா கக் கொண்டு கோரிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை. நெருக்கடியான நிலையில் கூட்டமைப்பு அரசின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தமை ஏற்றுக்கொள்ளக்கூடிய வரவேற்கத்தக்க செயற்பாடா கும்' இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித் தார்.**

சிறிலங்கத பொதுமக்கள் முன்ன ணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா வைரஸைக் கட்டுப்ப டுத்த நாடு தழுவிய ரீதியில் ஊரடங் குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளது. இதனால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு 5 ஆயிரம் ரூபா நிவாரணத் தொகை வழங்கியுள்ளது.


இதனையும் எதிர்த்தரப்பினர் தங்க ளின் அரசியல் தேவைக்குப் பயன் படுத்திக் கொள்கின்றார்கள். அரசு 20 ஆயிரம் ரூபா வழங்க வேண் டும் வலியுறுத்துகின்றார்கள்.

கடந்த ஆட்சியில் இயற்கை அனர்த் தத்தாலும், அரசின் முறையற்ற செயற்பாடுகளினாலும் பாதிக்கப்பட் டவர்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் நட்டஈடு ஏதும் இதுவரை காலமும் வழங்கப்படவில்லை. இவ் வாறான பின்னணியில் உள்ளவர் கள் எமது அரசைத் தற்போது விமர்சிப்பது நகைப்புக்குரியது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத் தவும், சவால்களை வெற்றிகொள் ளவும் எதிர்த்தரப்பினர் எந்தச் சந் தர்ப்பத்திலும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

பிரதமர் தலைமையில் அலரி மாளி கையில் கடந்த 4ஆம் திகதி முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர்க ளது பங்குபற்றலுடன் முக்கிய பேச்சு இடம்பெற்றது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமரிடம் கோரிக்கை உள்ளடங் கிய பத்திரத்தைச் சமர்ப்பித்தார்கள். இது தொடர்பில் மாறுபட்ட கருத்துக் கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

அரசியல் நோக்கங்களை அடிப்ப டையாக்க் கொண்டு கூட்டமைப்பி னர் பிரதமரிடம் எவ்வித கோரிக்கை களையும் விடுக்கவில்லை. அரச தரப்பினருக்கும் கூட்டமைப்பி ன ருக்கும் இடையில் அரசியல் ரீதியான நிலைப்பாடு வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. நெருக்கடி நிலை யில் அரசின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூட்ட மைப் பினர் முன்வந்தமை ஏற்றுக்கொள் ளக் கூடியது' என்றார். (ம-22)



# சலூன்களுக்கு 6 நிபந்தனைகள்

## வடக்கு சுகாதாரத் திணைக்களம் விதிப்பு

யாழ்ப்பாணம், மே 7

மூடப்பட்டிருந்த சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நீண்ட நாள்களின் பின்னர் திறக்கப்படவுள்ளதால் கொரோனாத் தொற்று ஆபத்துக்களைத் தவிர்ப்ப தற்காக 6 நிபந்தனைகளை வடக்கு மாகாண சுகா தார சேவைகள் திணைக்களம் விதித்துள்ளது.

இது தொடர்பில் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சலூன்களுக்குள் இருவருக்கிடையில் ஒரு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணவும். முடிதிருத்து நர்கள் கட்டாயமாக முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும், முடிதிருத்துநர்கள் ஒவ்வொரு வாடிக் கையாளருக்குரிய சேவையை நிறைவு செய்தபின் கை களை சரியான முறையில் ஓடும் நீரில் சவர்க் காரமிட்டு கழுவிய பின்பே அடுத்த வாடிக்கையாள ருக்குரிய சேவையை வழங்கவேண்டும், மொத்த மாக பணியில் உள்ள முடிதிருத்து நர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாடிக்கையாளரை உள்ளே அனுமதிக்கவும். உதாரணமாக முடி திருத்துநர்கள் இருவர் பணியில் இருந்தால் முடிவெட்டிக் கொண் டிருப்பவர்கள் இருவரும் காத்திருப்பவர் இருவரும் என்று நான்கு வாடிக்கையாளர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கவும்.

கடையின் அளவு சிறிதாயின் காத்திருக்கும் வாடிக் கையாளரின் எண்ணிக்கையை மேலும் குறையுங் கள், ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பாவிக்கும் உபகரணங்கள் அனைத்தையும் ஸ்பிறிட் மூலம் அல்லது கொதிக்கும் நீரில் அமிழ்த்தி தொற்றுநீக் கம் செய்யவும்.

தொற்றுநீக்கம் செய்யமுடியாத உபகரணங்களைப் பாவிப்பதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங் கள். போர்வை, துவாய் மற்றும் பிளேட் போன்ற வற்றை வழமைபோல் ஒருவருக்கு ஒன்று எனப் பாவிக்கவும்.

பிளேட்டை ஒருவருக்குப் பாவித்த பின் அதனை உரிய முறையில் கழிவகற்றல் செய்யவும். துவாய் கள் மற்றும் போர்வைகளை தோய்த்து உலர்ந்த பின்பே பாவிக்கவும், என்றுள்ளது. (ஒ.5)

# மேலும் இரண்டு கடற்படையினர் குணமடைவு

கொழும்பு, மே 7

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப் பட்டு கொழும்பு தேசிய தொற்றுநோய் தடுப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த வெலிசறை கடற்படை முகா மைச் சேர்ந்த மேலும் இரு படையினர் சிகிச்சையின் பின் முழுமையான குணம டைந்து வெளியேறியுள்ளனர் என்று கடற் படை ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

விடுமுறையில் சென்றிருந்த இந்தக் கடற்ப டையினர் இருவரும் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி அநுராதபுரம் மற்றும் அகலவத்தை மருத்துவமனைகளில் பி.சி.ஆர் பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது, அவர்கள் இருவரும் கொரோனாத் தொற்றி னால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அடை யாளம் காணப்பட்டனர். இதன் பின்னர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த இவர்கள் இருவருக்கும் சிகிச் சையின்போது மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையின் மூலம் அவர்களது உடம்பில் குறித்த வைரஸ் தற்போது இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர். இதற்கமைய இந்தக் கடற்படையினர் இருவர் உட்பட நான்கு கடற்படையினர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து இதுவரையில் முழுமை யான சுகமடைந்துள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ம-22)

# கைது 46,842

கொழும்பு, மே 7

ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 46 ஆயி ரத்து 842 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 12 ஆயிரத்து 152 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட் டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாடா ளாவிய ரீதியில் கடந்த 46 நாள்களாக ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சில இடங்களில் தொடர்ச்சியாகவும் சில இடங்களில் பகுதியளவிலும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எனினும் இந்த உத்தரவை மீறிக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பல்லாயிரத் தைத் தாண்டி நிற்கின்றது. நேற்று இரவு வரை ஊரடங்குச் சட் டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 46 ஆயிரத்து 842 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 12 ஆயிரத்து 152 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ம)

# சுதந்திரக் கட்சி வேட்பாளரின் மனைவிக்கு எதிராகப் போராட்டம்

## சுன்னாகத்தில் நேற்று பரபரப்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் மனைவிக்கு எதிராக சுன்னாகம் சபாப திக் கிராம மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமது கிராமத்தை வேட்பாளரின் மனைவி இழிவுபடுத்தியதாகக் குற்றம் சுமத் தியே பொதுமக்கள் நேற்று மதியம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள் ளனர்.

'குறித்த பெண் எமது கிராமத்தில் 22 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதி வழங்கினார். தனக்கு அறிமுகமான ஓர் இணைய ஊடகத்தையும் அழைத்து வந்தார்.

அவர் அந்த ஊடகத்துக்கு கருத்து தெரிவித்தார். எமது கிராமத்தைப் பற்றி தரக்குறைவாக அவர் கருத்து வெளி யிட்டார். எமது பெண்கள் குடும்பத்துக்கு கட்டுப்படாதவர்கள் என்றும் குறிப்பிட் டார். இந்தக் கிராமத்தில் 56 குடும்பங் கள் வசிக்கின்றன. ஓ.எல். பரீட்சைக்குத் தோற்றிய 5 பேர் உயர்தரம் கற்பதற் குத் தகுதி பெற்றுள்ளனர். பல்கலைக் கழக அனுமதி கிடைத்த ஒருவரும் உள்ளார்.

அரச வேலை வாய்ப்பைப் பெற்ற 17 குடும்பங்களும் உள்ளன. எமது கிரா மத்தை விற்று அவர்கள் வாக்குச் சேக ரிக்கக் கூடாது.

அதற்காகவே இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்படுகின்றது' என்று போராட் டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித் தனர். (ஒ.5,105)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்துயர் துடைக்கும் கொடையாளர்கள்





கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய முன்னாள் செயலாளரும், தற்போதைய உறுப்பினருமான செல்வசீலனின் முயற்சியால் ஜேர்மனியில் வசிக்கும் திரு.திருமதி பொன்னையா வசந்ததாஸ் தம்பதியின் நிதி உதவியில் 52 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-20)

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்தில் அமைந்துள்ள முள்ளம்தண்டுவடம் பாதிக்கப்பட்ட உயிரிழை அமைப்பின் பயனாளிகளுக்கு பாரமாரிப்பு பொருட்கள் உள்ளிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜேர்மனி தமிழர் கலாசார வட்டத்தின் நிதியுதவியில் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)




யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தால் 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. மானிப்பாய் வடக்குப் பகுதியில் வசிக்கும் வறுமைக்குட்பட்ட குடும்பங்களுக்கே இந்த உலர் உணவுகள் வழங்கப்பட்டன. (ம-159)




கிண்ணியாவில் இயங்கும் ஹஸன் மௌலவி பவுன்டேசன் ஊடாக திருகோணமலை ஊடகவியலாளர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)




கொரோனா வைரஸ் பாதிப்புக் காரணமாக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் ஏராளமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள இருபாலை வாழ் மக்களுக்கு இருபாலைதெற்கு கிராம அபிவிருத்தி சங்கம் பொது அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு உதவித்திட்டங்களை வழங்கியிருந்தது. அந்த வகையில் தற்போது பிரதேசத்தில் வதியும் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு போஷாக்கு உணவுப்பொதிகளையும் வழங்கியுள்ளது. (ம-20)


தொல்புரம் வடக்கம்பரை அம்பாள் அறக்கட்டளை நிதியத்தால், தொல்புரம் மேற்கில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பமொன்றின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும்விதமாக பசுமாடு ஒன்று அண்மையில் வழங்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கோபி விஜேந்திரா என்பவர் இதற்கான நிதியுதவியை வழங்கினார். (ம)






கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொன்னகர் மத்தி, பொன்னகர் வடக்கு மற்றும் 72 வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. தலா 3500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்களுக்கான கனடா வாழ் தாயக மக்களின் நிதிப்பங்களிப்பில் கனடா உறங்கா விழிகள் தொண்டு நிறுவனத்தால் உலர் உணவுப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. (ம)








கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள சங்கானை பிரதேசத்தைச் சேர்ந்த சிகை ஒப்பனையாளர்களுக்கு வட்டு இந்து வாலிபர் சங்கத்தால் உலர் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா ஆய்வகத்தில் இருந்துதான் வந்ததா?

# சீனாவுக்கு எதிரான ஆதாரங்களை அமெரிக்கா இன்னும் தரவில்லை!!

### உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு



வொஷிங்டன், மே 7

கொரோனா வைரஸ் சீனாவால் திட்டமிட்டுத்தான் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வைரஸ் சீனாவின் வுகான் நகர ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டு திட்டமிட்டுப் பரப்பப்பட்டது என்று குறிப்பிடும் அமெரிக்கா, சீனாவுக்கு எதிரான ஆதாரங்களை இதுவரை தரவில்லை - என்று தெரிவித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.

சீனாவின் வுகான் நகர ஆய்வகத்தில் தான் கொரோனா வைரஸ் உருவானது என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன என்று அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ குற்றஞ்சாட்டிய 24 மணிநேரத்துக்குள் இவ்வாறு அறிக்கையிட்டுள்ளது உலக சுகாதார நிறுவனம்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ், சீனாவின் வுகான் நகரில் தோன்றியது என்று கூறப்படுவது ஊகத்தின் அடிப்படையில்தான் என்றே கருதுகின்றோம். கொரோனா வைரஸ் தோற்றம்பற்றி எந்தவொரு குறிப்பிட்ட ஆதாரத்தையும் அமெரிக்க அரசு எங்களிடம் வழங்கவில்லை. அப்படி ஆதாரம் வழங்கினால் அதைப் பெற்றுக் கொள்வதற்கும் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் தயார்.

கொரோனா வைரஸ் இயற்கையானது தான் என்பதற்கான ஆதாரங்களும், ஆலோசனைகளும்தான் எங்களுக்கு வந்துள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோவும் கொரோனா வைரஸ் வுகான் ஆய்வகத்தில் இருந்துதான் வந்திருக்கிறது என்று கூறுவதற்கான தரவுகள் அல்லது ஆதாரங்கள் இருந்தால், அதை பகிர்ந்து கொள்வதா, எப்போது பகிர்ந்து கொள்வது என்பதை அமெரிக்க அரசுதான் தீர்மானிக்க முடியும். அதே நேரத்தில் அப்படியெதுவும் இன்றி வெறுமனே ஒரு முடிவுக்கு வருவது என்பது உலக சுகாதார நிறுவனத்துக்கு கடினமான விடயம் ஆகும். ஆனால் இது தவறான செய்கையின் தீவிரமான விசாரணைக்கு உரியது என்று முன்னி றுத்தப்பட்டால் இதைக் கையாள்வது மிகக் கடினமானது. இது அறிவியல் விவகாரம் அல்ல. இது அரசியல் விவகாரம். அறிவியல் என்றால் அதற்கான விடையைக் காண முடியும்- என்றுள்ளது. (ம)

## மே மாதம் இறுதிவரை ஜப்பானில் ஊரடங்கு!


டோக்கியோ, மே 7

ஜப்பானில் மே மாதம் இறுதி வரையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று ஜப்பானில் தீவிரமெடுப்பதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக் காரணமாக ஜப்பானில் இந்த மாதம் 11ஆம் திகதி வரையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டி ருந்தது. எனினும் கொரோனா தீவிரமெடுத்ததை அடுத்து மே மாதம் இறுதிப் பகுதி வரையில் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது. (ம)

## 100 மணி நேரத்துக்குள்ளாக கொரோனாவை அழிக்கலாம்!

### சர்வதேச ஆயுத வியாபாரி இப்படிக் கதை சொல்கிறார்



வொஷிங்டன், மே 7

100 மணி நேரத்துக்குள் கொரோனா வைரஸை அழிக்கும் திட்டம் தன்னிடம் உள்ளது என்று தெரிவித்துள்ளார் சர்வதேச ஆயுத வியாபாரியும் பிரபல கோடீஸ்வரருமான மூசா பின் ஷம்சர்.

இது தொடர்பில் அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனாவை ஆபத்தான ஆயுதங்களை விட பயங்கரமானதாக கருதி அதனை அழிக்க உலக விஞ்ஞானிகள் குறிப்பாக நாசாவின் பிரபல விஞ்ஞானிகள் முன்வர வேண்டும். இல்லையென்றால் இந்த ஆண்டு இறுதிக்குள் மனித நாகரிகம் முழுவதுமாக அழிந்துவிடும்.

அணு அல்லது யுரேனியம் சாம்பலை செல்பார் சாம்பலுடன் சேர்த்து தடிமனான புகையை நாசாவால் உருவாக்க முடியும். அதில் மனித உடல்நல கேடுகளை தவிர்ப்பதற்கு விஞ்ஞானிகள் வேறு சில கூறுகளைச் சேர்க்கலாம். அதன் பின்னர் அமெரிக்க விமானப்படை போர் விமானங்கள் மூலம் அதிகபட்சமாக 10 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து இந்த புகையை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும்.

கொரோனா நோயாளிகளை எவ்வாறு குணப்படுத்தப்படுவது என்பது குறித்து உலக தலைவர்களுக்கு எதுவும் தெரியாது. எனவே எனது ஆலோசனையை கேட்டு நடந்தால் உலக நாடுகள் அழிவில் இருந்து தப்பலாம் - என்றார். (ம)

## புதுவகை வைரஸால் மடிகின்றன கிளிகள்!

சிட்னி, மே 7

கொரோனா வைரஸ் போன்று புதிய வகை வைரஸ் ஆஸ்திரேலியாவில் கிளிகளிடையே பரவி வருகின்றன. இதனால் பல்லாயிரம் கிளிகள் அங்கு உயிரிழந்துள்ளன.

இதுபற்றி ஆய்வுசெய்த கிரிபித் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளரான பேராசிரியர் டேரிஸ் ஜோன்ஸ், கிளிகை தாக்கும் இந்த வைரஸ் கிளிகள் தங்களுக்குள் அன்புசெலுத்தும்போதும், சண்டையிடும்போதும் பரவுகிறது. இதுவும் கொரனா வைரஸைப் போலவே கிளிகளின் நுரையீரலைப் பாதிக்கின்றது. இதனால் மரத்தில் உட்கார முடியாத கிளிகள் அப்படியே கீழேயும் விழுகின்றன.

இந்த புதுவித வைரஸ் மனிதர்களுக்கு பரவுமா என்பது குறித்து ஆய்வுகள் நடத்து வருகின்றன - என்றுள்ளார். (ம)






## இயந்திரத் துப்பாக்கிகளுக்கு கனேடிய அரசு தடைவிதிப்பு

ஒட்டாவா, மே 7

நோவா ஸ்காட்டியா துப்பாக்கிச்சூடு சம்பவத்தின் எதிரொலியாக இயந்திரத் துப்பாக்கி உள்ளிட்ட கடுமையான தாக்குதல் துப்பாக்கிகளுக்கு கனடா தடை விதித்துள்ளது.

கனடாவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள நோவா ஸ்காட்டியா மாகாணத்தில் கடந்த மாதம் 20ஆம் திகதி கேப்ரியல் வோர்ட்மன் என்ற நபர் பொலிஸ் உடையில் சென்று கண் மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினார்.



இதில் பெண் பொலிஸ் அதிகாரி உள்பட 26 பேர் கொல்லப்பட்டனர். கொரோனா பாதிப்புக்கு மத்தியில் இந்த கொடூர தாக்குதல் ஏற்பட்டு மொத்த கனடாவையும் உலுக்கியது. கனடாவில் இதுபோன்ற துப்பாக்கி சூடு சம்பவங்கள் அரிதிலும் அரிதானது என்பதால், இது அந்த நாட்டின் வரலாற்றிலேயே மிக மோசமான தாக்குதலாக பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் நோவா ஸ்காட்டியா துப்பாக்கிச்சூடு சம்பவத்தின் எதிரொலியாக இயந்திரத் துப்பாக்கிகளுக்குத் தடை விதிக்கப்படுகின்றது என்று கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அறிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் நாள்களில் டெங்கால் சிக்கல் வரும்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



கொழும்பு, மே 7

**எதிர்வரும் நாள்களில் ஏற்படவுள்ள மழையுடனான கால நிலை காரணமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாகக் கூடும் என்று சுகாதார அமைச்சு முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.**

கடந்த வாரம் மழை பெய்துள்ளது. இனியும் பெய்யக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே டெங்குப் பரவல் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும். டெங்கு பெருகக்கூடிய இடங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அத்தகைய இடங்களை பொதுமக்கள்தான் அழித்து விடவேண்டும். பொதுமக்கள் தத்தம் வீடுகளிலும் வளவுகளிலும் டெங்கு பரவாதிருக்கும் வகையில் சுற்றுச் சூழலைப் பேணவேண்டும். தண்ணீர் தேங்கிநிற்காதவாறு பொருள்களை உரிய ஒழுங்கமைப்பில் வைத்திருங்கள் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அனைவரும் வீட்டில் இருப்பதால் டெங்கு நோய் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் தலைவர் மருத்துவர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 18 ஆயிரத்து 835 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

வடக்கில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 584 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

அதன்படி யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 71 பேரும், வவுனியாவில் 230 பேரும், மன்னாரில் 117 பேரும், கிளிநொச்சியில் 104 பேரும், மன்னாரில் 62 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் போன்றே டெங்குத் தொற்றும் பரவுகின்றது. கொரோனா ஒழிப்புக்கு எடுக்கும் முக்கியத்துவம் போன்று டெங்கு ஒழிப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று சுகாதாரத் திணைக்களம் முன்னரே அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## ராஜகிரியவில் 30 பேர் தனிமைக்கு

கொழும்பு, மே 7

கொழும்பு ராஜகிரிய, பண்டாரநாயக்கபுரத்தைச் சேர்ந்த 30 பேர் கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வெலிசறை மருத்துவமனை விடுதி இலக்கம் 11 மற்றும் 12 இல் தனிமைப்படுத்தப்பட்ட 46 நபர்களை அவர்களின் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

## இரசாயன உரம் தாராளம்

கொழும்பு, மே 7

பற்றாக்குறை ஏதுமின்றி போதுமானளவு இரசாயன உரம் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது என்று தேசிய உர செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்காலத்தில் உரம் வழங்க முறையான வழிமுறை வகுக்கப்படும்.

உரம் தொடர்பான தேவைகளை, வேளாண்மை சேவை மையங்களிலிருந்து கிடைக்கப்பெறும் விஞ்ஞான ரீதியான பரிந்துரைகளின் அடிப்படையில் வெளியிட எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மறைக்கவேண்டிய அவசியமில்லை

### முன்னாள் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 7

"கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையை மறைக்க வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. சுகாதார பாதுகாப்புத் தரப்பினரின் கண்காணிப்புக்கு அமையவே அரசு தற்போது செயற்படுகின்றது" என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட்19 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையை அரசு மறைப்பதாக எதிர்த்தரப்பினர் குற்றஞ்சுமத்துகின்றார்கள்.

வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அறிவிக்க வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது.

சுகாதாரப் பாதுகாப்புத் தரப்பினரின் ஆலோசனைக்கு அமையவே அரசு தற்போது செயற்படுகின்றது. -என்றார். (த)

## ஹெரோய்னுடன் இருவர் கைது

கொழும்பு மாளிகாவத்த பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதோடு, அதை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாளிகாவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெத்தாராம விகாரை வீதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள்கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

28,30 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருசந்தேகநபரிடமிருந்து 7 கிராம் 130 மில்லிகிராம் ஹெரோய்னும், மற்றைய சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது (த)

## விற்றமின்–'டி' சத்து குறைந்தால் கொரோனா தொற்று அதிகரிக்கும்

### ஆய்வில் கண்டுபிடிப்பு

கொழும்பு, மே 7

விற்றமின்-டி சத்து குறைபாடு உள்ளவர்கள் இலகுவில் கொரோனா தொற்றுக்கு ஆளாகின்றனர் என்றும், கொரோனா தொற்று ஏற்பட்டு உயிரிழந்தவர்களில் அநேகமானோருக்கு விற்றமின் - டி சத்து குறைபாடு இருந்துள்ளது என்றும் விஞ்ஞானிகளின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் உலக மக்களின் உயிரை வேகமாகக் குடித்து வருகிறது. இந்த வைரஸைக் கட்டுப்படுத்த ஒரு பக்கம் மருத்துவ விஞ்ஞானிகள் தடுப்பூசி மற்றும் குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இன்னொருபுறம், கொரோனா எப்படிப் பட்டவர்களைத் தாக்குகிறது? என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப சிகிச்சை முறைகளை மாற்றி உயிரிழப்பை எவ்வாறு குறைப்பது என்பது குறித்த விரிவான ஆய்வுகளையும் அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத முதியவர்களின் உயிரை கொரோனா வைரஸ் எளிதில் இரையாக்கிக்கொள்கிறது, என்பது தொடக்கத்திலேயே கண்டறியப்பட்ட உண்மை.

2 வாரங்களுக்கு முன்பு 120 கிலோவுக்கும் அதிகமான எடை கொண்டவர்களில் 5ல் ஒருவர் கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி உயிரிழக்கிறார் என்பதும் ஆய்வின் மூலம் தெரியவந்தது.

இந்த நிலையில், இங்கிலாந்தின் கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகம் மற்றும் ராணி எலிசபெத் மருத்துவமனை நிதியம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் இணைந்து 20 ஐரோப்பிய நாடுகளில் கொரோனாவுக்கு பலியானவர்கள் எந்தக் குறைபாடு காரணமாக இறந்தார்கள்? என்பதை ஒப்பீடு செய்து அண்மையில் ஓர் ஆய்வை நடத்தினர்.

இதன் தொடக்க நிலை ஆய்வின் முடிவில் பெரும்பாலானவர்கள், விற்றமின்-டி சத்து குறைபாட்டால் கொரோனா வைரஸிடம் உயிரைப் பறிகொடுத்திருக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

இதைத்தொடர்ந்து விற்றமின்-டி சத்து கிடைக்கும் வகையில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க அவர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

இதுகுறித்து இங்கிலாந்து விஞ்ஞானிகள் கூறுகையில், "கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு விற்றமின் - 'டி' சத்து கூடுதலாக கிடைத்தால் அவர்கள் வேகமாக குணம் அடைவதற்கு வாய்ப்பு அதிகம். ஏனென்றால் இந்த சத்துக் குறைபாடு காரணமாகத்தான் இவர்களை கொரோனா எளிதாக தாக்கி உள்ளது. இறந்தவர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் விற்றமின்-டி மிகவும் குறைவாக கொண்டிருந்தவர்கள்தான்" என்றனர்.

விற்றமின் 'டி' சத்து, இயற்கையாகவே சூரிய ஒளி மூலம் மனிதர்களுக்கு நிறைய கிடைக்கிறது. சூரை, பாரை உட்பட பல மீன் வகைகளில் விற்றமின்-'டி' உள்ளது. தோடம்பழச்சாறு, தானிய வகைகள், சோயா பால், பாலாடைக்கட்டி, காளான், முட்டையின் மஞ்சள் கரு ஆகியவற்றிலும் விற்றமின்-'டி' தாராளமாக கிடைக்கிறது. கொரோனா தாக்குதலிலிருந்து தப்பிக்க பொது இடங்களில் சமூக இடைவெளியைப் பின்பற்றுவது, முகக் கவசம் அணிவது, அவ்வப்போது சோப் மூலமாக கை கழுவது போன்றவற்றுடன் விற்றமின்-'டி'சத்தை அதிகரிப்பதுவும் சிறந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### கொடுப்பனவுகளில் மோசடி

## சமுர்த்தி அலுவலர் பணி இடைநீக்கம்

மட்டக்களப்பு, மே 7

மட்டக்களப்பில் சமுர்த்தி பெறுபவர்களின் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவில் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரொருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி மாவட்டச் செயலரின் பரிந்துரைக்கமைய சமுர்த்திப் பணிப்பாளர் நாயகத்தால் அவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கிரான் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றிய அந்த அலுவலர் கொரோனா வைரஸ் சூழலில் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கலில் 13 பேருக்கு தலா 4ஆயி ரம் ரூபா மட்டுமே வழங்கியிருந்தார் என்றும், 5 பேருக்கு 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவில்லை என்றும், சமுர்த்திக்காக காத்திருப்புப் பட்டியலிலுள்ள 50 குடும்பங்களுக்கு சமுர்த்தி உணவு முத்திரை பெற்றுத் தருவதாக தலா ஆயிரம் ரூபா கப்பம் பெற்றுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவர் மீது முன்னரும் காணி மோசடி தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கிரான் பிரதேச செயலர் விசாரணைக் குழு அமைத்து இதுபற்றி விசாரணை நடத்தியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறீ சபாரத்தினத்தின் 34 ஆவது நினைவு தினம்

யாழ்ப்பாணம், மே 7

ரெலோ கட்சியின் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 34 ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம் நல்லூர் அரசடி வீதியிலுள்ள முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் அலுவலகத்திலும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வவுனியா அலுவலகத்திலும் நடைபெற்றது.

வவுனியாவில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் து.நடராஜசிங்கம் தலைமையில் நடை இந்த நிகழ்வில் சிறி சபாரத்தினத்தின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து தீபமேற்றி மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

யாழ்ப்பாண நிகழ்வில் தீபம் ஏற்றி, மௌன அஞ்சலி செலுத்தி, மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் விந்தன் கனகரத்தினம் தெரிவித்ததாவது:

எமது தலைவர்கள் என்ன இலட்சியம், என்ன கொள்கைக்காக இந்தப் போராட்டங்களை ஆரம்பித்தார்களோ அவை எல்லாம் தற்போது மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகள் உட்பட பல போராட்ட இயக்கங்களின் போரால் பல்வேறு அரசியல் மோசடிகள் இடம்பெறுகின்றன. போராட்டம் என்றால் என்ன என்று தெரியாதவர்கள், அதற்குப் பங்களிப்புச் செய்யாதவர்கள் இன்று அதன் பெயரால் பல்வேறு மோசடிகளைச் செய்துவருகின்றனர். தியாகம், போராட்டம், மரணம் என்றால் என்ன என்று தெரியாதவர்கள் சுயலாப அரசியல் செய்கிறார்கள். அதை அவர்கள் மனதில் நிறுத்தி மண்ணுக்காக உயிர் நீத்தவர்களின் தியாகங்களை உணர்ந்து செயற்பட வேண்டும்- என்றார். (த-7)

# ஏழைகளின் கல்விக் கனவு கானல் நீராகிவிடக்கூடாது!

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கம் தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம், மே 7

**வசதி வாய்ப்புக்கள் உள்ள மாணவர்கள் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு 'ஒன்லைனில்' கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளமையை ஆரோக்கியமான விடயமாகக் கருதினாலும் வறிய, வசதி வாய்ப்புக்கள் இல்லாத ஏழை மாணவர்களின் கல்விக் கனவு கானல் நீராகிவிடக்கூடாது.**

இவ்வாறு தெரிவித்துள்ளது, வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கம்.

இது பற்றி சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை உறுதிப்படுத்த வேண்டிய தேவை வலயக் கல்விப் பணிமனைக்கு உண்டு. கொரோனா வைரஸ் உலகத்தையே உருளவிடாது உலுக்குகின்றது என்பது பேராபத்துள்ள விடயமாக இருந்தாலும் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வது தனிமனிதர்களின் கைகளில்தான் உள்ளது.

மனித இருப்புக்கும் இயங்கு நிலைக்கும் காலம் முக்கியமானது. ஏனெனில், 2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நோக்கி கற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கான முதலாம் தவணைப் பாடத்திட்டமும் நிறைவடையவில்லை. இரண்டாம் தவணைக்கான பாடத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

கொரோனா தாக்கத்தால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் அன்றாட கூலிகளும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுமே. இவர்கள் பசியைப்போக்க போராடுவதுடன் உள அமைதியை இழந்து சமூக அமைப்பில் தமது பிள்ளைகளின் கல்விநிலைமாறிவிடுமோஎனநினைத்துக் கண்ணீர் விடுகின்றனர்.

இதனைக் கவனத்திற்கொண்டு பாடசாலைகளின் மூலம் ஏழை மாணவர்களின் தரவுகளைத் திரட்டி கையேடுகளைத் தயாரித்து சுகாதாரப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் வழங்க வலயக் கல்விப் பணிமனைகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல், இந்த வருடம் ஒன்பதாவது இடத்தில் சரணாகதியடைந்த வடக்கு மாகாண க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளில் அடுத்தவருடம் இரட்டிப்பு வீழ்ச்சி ஏற்படும்.

எனவே நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு ஏற்புடையதாக திட்டங்களை செயற்படுத்தாது மாகாணத்துக்குட்பட்ட கிராமப்புற பாடசாலைகள், மாணவர்களின் பொருளாதார சமூக நிலைமைகளைக் கருத்திற்கொண்டு திட்டங்களை மேற்கொண்டு ஏழை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்கமளித்து உறுதிப்படுத்த வேண்டும்- என்றுள்ளது. (த)

# வீடமைக்க அடிக்கல்

கணவனை இழந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் குடும்பத்துக்கு இராணுவத்தினர் வீடு அமைத்துக்கொடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு ஆனந்தா கல்லூரி பழைய மாணவர் ஒருவரின் நிதிப்பங்களிப்பில் இராணுவத்தினரால் வீடு அமைக்கப்படவுள்ளது.


சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் அது அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான அடிக்கல்லை யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி ருவான் வணிகசூரிய நேற்று நாட்டினார்.

ஜே /182 உடுவில் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் பெண் ஒருவர் கணவனை இழந்த நிலையில் குடிசை வீட்டில் வசித்து வருகின்றார்.

கிராம அலுவலர் ஊடாக இந்தக் குடும்பம் தெரிவு செய்யப்பட்டு, புதிதாக வீடு அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டது (த-106)

# மடு வலயத்தில் முதலாவது '9ஏ'



மன்னார், மே 7

மன்னார் மடு கல்வி வலயத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முதல் தடவையாக ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் ரி.டேவதரன் '9ஏ' சித்திபெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மன்னார் மடு கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரையான சுமார் 21 வருடங்களுக்குப் பின்னர் அந்தப் பாடசாலையில் இந்தச் சித்தி கிடைத்துள்ளது.

இந்த மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையிலும் 184 புள்ளிகளைப்பெற்று மாவட்ட ரீதியில் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

"மடு கல்வி வலயத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு 400 மாணவர்கள் தோற்றியுள்ள நிலையில் ஒரு மாணவன் '9ஏ' சித்தி பெற்றுள்ளார். ஏனைய மாணவர்களும் சிறப்பான சித்திபெற்று உயர்தர கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ளார்கள் என்பது மகிழ்ச்சி தான். ஆனாலும் இன்னும் அதிக முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். வடக்கு மாகாணத்திலுள்ள 12 வலயங்களில் எமது வலயம் 67.2 புள்ளிகளைப்பெற்று 5ஆம் இடத்தில் உள்ளது. இன்னும் முன்னேற்றம்பெற பல திட்டங்களை வகுத்துள்ளோம்" என்று மடு கல்வி வலயப் பணிப்பாளர் க.சத்தியபாலன் தெரிவித்தார். (த-56)

# இந்தமாதமும் ரூ.5,000 பணிகள் ஆரம்பம்

## கிளிநொச்சி செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 7

கடந்த மாத விசேட கொடுப்பனவான 5ஆயிரம் ரூபா பெற்றவர்களுக்கு இந்த மாதக் கொடுப்பனவையும் இந்த வாரத்துக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

"கொவிட் 19 தொற்றுக் காரணமாக தொடர்ச்சியாக ஊரடங்கு போடப்பட்ட நிலையில் தற்போது கிளிநொச்சி மாவட்டம் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது. கொவிட்19 தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட நிலையில் இந்த மாதமும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதனை வழங்க எமது அலுவலர்கள் தயாராக உள்ளனர். மாவட்டத்தில் சமுர்த்தி பெறுகின்ற 24ஆயிரத்து 64 குடும்பங்களும் சமுர்த்தி பெறுவதற்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ள 10ஆயிரத்து 387 குடும்பங்களுக்குமான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

முதியோர் கொடுப்பனவுகள் முதியோர் காத்திருப்போர் கொடுப்பனவுகள், விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவு என அனைத்துக் கொடுப்பனவுகளையும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மாதம்போன்று இந்தமாதமும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன. விடுமுறைகள் வருவதால் கொடுப்பனவுகள் இந்த வாரத்துக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. தபாலகம் மூலமாக கொடுப்பனவு பெறுபவர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கே சென்று அதை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (த-6)

# 1.5மில்லியன் டொலர் இலங்கைக்கு கொடை

கொழும்பு, மே 7

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இலங்கைக்கு ஆஸ்திரேலியா 1.5 மில்லியன் டொலர் நிதியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கை அரசின் கோரிக்கைகளுக்கும், இலங்கைமக்களின்தேவைகளுக்கும் உதவியளிக்க ஆஸ்திரேலிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் [illegible] தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் பிற உதவிகளை வழங்கி [illegible] அறிக்கையில் [illegible]. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா நிதி தொடர்பில் வெளிப்படைத்தன்மை வேண்டும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, மே 7



கொரோனா தொற்றில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக வழங்கப்பட்ட அன்பளிப்பு நிதி தொடர்பில் வெளிப்படைத்தன்மை வேண்டும் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க உலக வங்கியிலிருந்து 127 மில்லியன் டொலரும் சீனாவிலிருந்து முதற்கட்டமாக 500 மில்லியன் டொலரும், இரண்டாம் கட்டமா 750 மில்லியன் டொலரும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அரசு அதனை நிராகரித்துள்ளது.

ஆனால் இந்த நிதி தொடர்பில் அரச இணையத்தளத்தில் பதிவாகியுள்ளது. சுனாமி நிதியைப்போல் இந்த நிதியையும் அரசு மோசடிசெய்து வருகின்றதா என தற்போது பலரின் மனதில் சந்தேகம் எழுந்துள்ளது.

தற்போது அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்குவதாக குறிப்பிட்ட சலுகைகள் எதுவும் இதுவரையில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. 5 ஆயிரம் ரூபா நிதியும் இன்னும் முழுமையாகப் பெற்றுக் கொடுக்கப்படாத நிலையில் இந்த மாதத்திற்கான நிதியையும்வழங்குவதாக அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையையும் விட எதிர்வரும் காலத்தில் பெரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டி ஏற்படும். பெரிய பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுக்க நேரிடும். கடந்த காலத்தில் தூர நோக்கு சிந்தனையின்றி வரிக் குறைப்புச் செய்ததனால் 450 மில்லியன் ரூபா அரச வருமானத்தை அரசு இழக்க வேண்டி ஏற்பட்டது. தற்போது வைரஸ் பரவலினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் அரச வருமானம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளில் இன்னும் வெற்றி கிடைக்கவில்லை. எதிர்வரும் தினங்களில் ஆயிரம் பேர் வரையிலான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படலாம் என்று சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் தொடர்ந்தும் நாட்டை முடக்கி வைத்திருக்கவும் முடியாது - என்றார். (ம)



# அழகக சங்கத்தினருடன் சுகாதாரப் பரிசோதகர் சந்திப்பு!

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கத்தினருக்கும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் இடையிலான சந்திப்பு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது. கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் காலை 11 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் சிகை அலங்கரிப்பு நிலையங்களை முறையான சுகாதார முன்னேற்பாடுகளுடன் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசு அறிவுறுத்தியுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (ம-6)

# சலூன்களைத் திறக்குமாறு கோரியவர்களுக்கு நன்றி

## மன். சிகையலங்கார சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவிப்பு

மன்னார், மே 7

சுகாதார முறைப்படி தொழில்களைச் செய்கிறோம். சிகை அலங்காரத் தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றி. இவ்வாறு மன்னார் சிகையலங்கார சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக் காரணமாக நாடளாவிய ரீதியில் பதினைந்து நாள்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த சிகையலங்கார நிலையங்கள் அனைத்தையும் திறப்பதற்கு நேற்று முனதினம் அனுமதி வழங்கப்பட்டி ருந்தது. மன்னார் மாவட்டத்தில் உள்ள சிகை அலங்கார நிலையங்கள் அனைத்தும் நேற்றுக் காலை ஏழு மணிக்கு திறக்கப்பட்டன.


இது தொடர்பாக மன்னார் மாவட்ட சிகை அலங்கார கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவர் மேலும் தெரிவித்த தாவது;

கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக கடந்த பதினைந்து நாள்களாக சிகையலங்கார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. இதனால் மன்னார் மாவட்டத்தில் உள்ள 156 சிகையலங்கார நிலையங்களை நம்பி வாழ்ந்த 280 குடும்பங்கள் வாழ்வாதாரத்திற்காக பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. சமாசம் என்ற வகையில் நாங்கள் எமக்குரிய வாழ்வாதாரத் தொழிலை விடுவித்துத் தரும்படி பல அதிகாரிகளிடமும் பேச்சுக்களை நடத்தி பின்னர் சில தினங்களுக்கு முன் மன்னார் மாவட்டச் செயலர் ஊடாக அரசுக்கு கடிதம் அனுப்பியிருந்தோம். தற்போது சிகையலங்கார நிலையங்களை திறப்பதற்கு அரசால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மன்னார் நகரம், நானாட்டான், மாந்தை போன்ற அனைத்து இடங்களிலும் உள்ள நிலையங்கள் திறக்கப்பட்டு மிகவும் மகிழ்ச்சியாக தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலைச் செய்து வருகிறார்கள்.

சிகையலங்கரிப்பாளர்களின் வாழ்வாதாரத் தொழில் நிலையங்களை மீண்டும் திறந்து நடத்துவதற்கு உரிய அதிகாரிகளுடன் பரிந்து பேசி அனுமதியைப் பெற்றுத் தந்த மன்னார் மாவட்டச் செயலக அதிகாரிகள், மன்னார் சுகாதாரத்துறையினர், பாதுகாப்புத் தரப்பினர் அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். சுகாதாரத்துறையினரின் அறிவுரையின் படியே சிகையலங்கார நிலையங்களில் தொழில் நடவடிக்கைகள் நடை பெற்று வருகின்றன-என்றார். (ப-213)

# நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் காலமானார்

மன்னார்.மே 7



நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் றாசீக் பரீது தனது 62 ஆவது வயதில் நேற்று புதன் கிழமை காலமானார்.

திடீர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு முருங்கன் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் அவர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். (ஐ-56)

# முன்னாள் எம்.பியின் வீட்டில் மதுபானப் போத்தல்கள் மீட்பு

கொழும்பு, மே 7

சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சராக இருந்த முன்னாள் எம்.பி நளின் பண்டாரவின் இல்லத்திலிருந்து சட்ட விரோத மதுப்போத்தல்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

குருநாகல் - குளியாப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள இல்லத்திலிருந்தே அவை மீட்கப்பட்டுள்ளன. குளியாப்பிட்டிய பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி மஹிந்த திசாநாயக்கவின் அதிரடி நடவடிக்கையை அடுத்து அங்கு 15 மதுப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இந்த சம்பவம் தொடர்பில் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

# டெங்கு நோய்த் தாக்கம் மட்டக்களப்பில் குறைவு

மட்டக்களப்பு, மே 7



மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்பு தாக்கம் கடந்த காலங்களைவிட கணிசமாகக் குறைந்து வருகின்றது. கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி தொடக்கம்; 2020 மே முதலாம் ஆம் திகதி வரையும் 27 பேர் டெங்குநோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த வாரம் டெங்குத் தாக்கத்தால் பாதிப்புக்குள்ளான வாழைச்சேனை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இதுவரை 14 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அது போன்று ஓட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும், ஏறாவூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும், செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேரும், வாகரை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருமாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும் வெல்லாவெளி, பட்டிப்பளை, கோரளைப்பற்று மத்தி, கிரான், வவுணதீவு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை. கடந்த சில வாரங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயால் எந்த ஒரு இறப்புக்களும், பதிவாகவில்லையென மருத்துவர் வே.குணராஜசேகரம் தெரிவித்தார். (ப-46)

# களவாக மணல் ஏற்றிய உழவியந்திரம் பறிப்பு

கொடிகாமம், மே 7

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய உழவு இயந்திரம் ஒன்று கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணியளவில் மந்துவில் நாவலர் கோட்டம் குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மணல் ஏற்றப்பட்ட நிலையில் நின்ற உழவு இயந்திரத்தை கைப்பற்றினர். பொலிஸார் வருவதை எப்படியோ அறிந்து கொண்டவர்கள் அங்கிருந்து தப்பித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-159)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41,589 குடும்பங்களுக்கு ரூ.5,000 வழங்கப்பட்டது

*முல்லை. செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 7


முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 44 ஆயிரத்து 120 குடும்பங்களில் 41 ஆயிரத்து 589 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 623 மக்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 44 ஆயிரத்து 120 குடும்பங்கள் வாழ்கின்றன. இவ்வாறு வாழும் குடும்பங்களில் அரச அலுவலர்கள் குடும்பங்கள் மற்றும் ஓய்வூதியர்கள் குடும்பங்கள் நிரந்தர அரச வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இது வழங்கப்படுவதில்லை. வறுமையானோருக்கே இந்த 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இதில் சமுர்த்தி உதவி பெறும் 33 ஆயிரத்து 748 குடும்பங்களுக்கும், சிறுநீரகப் பாதிப்பாளர்களைக் கொண்ட 926 குடும்பங்களுக்கும் விசேட தேவையுடைய 4 ஆயிரத்து 148 குடும்பங்களுக்கும் என்று மொத்தம் 41 ஆயிரத்து 589 குடும்பங்களுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-105)

# கொவிட்-19ஐ வெற்றிகரமாக கட்டுப்படுத்தி வருகின்றோம்

*அணிசேரா அமைப்பின் இணையவழி மாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்தார்*



**கொழும்பு, மே 7**

**கொவிட் 19 அச்சுறுத்தலை இலங்கை வெற்றிகரமாக கட்டுப்படுத்தி வருகிறது. இதுவரை நடத்தப்பட்ட மொத்த பி.சி.ஆர் பரிசோதனைகளில் 3 வீதம் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். இறப்பு விகிதம் 0.97வீதம் என்ற மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

'கொவிட் 19க்கு எதிராக ஒன்றுபடுவோம்' என்ற தலைப்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அணிசேரா அமைப்பின் இணைய வழி மூலமான மாநாட்டில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெப்ரவரி மாத ஆரம்பத்தில் தொற்றுநோய் பரவுவதைக் கண்காணிப்பதற்கும், வைரஸ் பரவுவதை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முக்கிய சுகாதாரப் பணியாளர்கள், உயர்மட்ட இராணுவ வீரர்கள் மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு பணிக் குழுவை எனது அரசு நிறுவியது.

முதல் கொவிட் 19 இலங்கை நோயாளி மார்ச் 11 அன்று அடையாளம் காணப்பட்டார். ஆரம்ப நோயாளிகள் பல நாடுகளிலிருந்து வந்த இலங்கையர்களே. அப்போதிருந்து கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 183 பேர் குணமடைந்து வெளியேறியுள்ளனர், 527 பேர் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நபர்களில் பெரும்பாலானோர் நோய் அறிகுறியற்றவர்கள்.

வைரஸால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் கண்டறியப்பட்ட போதெல்லாம், பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்புகொண்ட நபர்களின் விவரங்களைக் கண்டறிய தொடர்பு கண்டுபிடிக்கும் முறை பயன்படுத்தப்பட்டது.

அடையாளம் காணப்பட்டவுடன், அத்தகைய நபர்கள் அனைவரும் சிறப்பாக நியமிக்கப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர் அல்லது அத்தகைய நபர்களை சுய தனிமைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒரு முழுப் பகுதியும் தொற்று பரவியுள்ளதாக கண்டறியப்பட்டால், அத்தகைய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன - என்று கூறியுள்ளார். (த)

## விற்பனை நிலையத்தில் தீ பரவல்

கொழும்பு, மே 7

காலி நகரிலுள்ள விற்பனை நிலையத்தில் கடந்த திங்கள் இரவு திடீரென்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச மக்கள் மற்றும் காலி பொலிஸார் இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீப் பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)



## 60 பொலிஸாருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, மே 7

பேருவளையில் கடமையில் ஈடுபட்ட 60 பொலிஸார் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். எனினும், பரிசோதனை முடிவில் எவருக்கும் தொற்று உறுதி செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பேருவளை, சீனன் கொட்டுவ, பன்னில உள்ளிட்ட பகுதிகளில் கொரோனா தொற்றாளர்கள் அதிகளவில் பதிவாகியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்தே 60 பொலிஸாரிடம் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## பேக்கரிப் பொருள்களை விற்கும் முச்சக்கர வண்டிகளில் சிறப்புப் பரிசோதனை!

வவுனியா, மே 7

வவுனியாவில் பேக்கரிப் பொருள்களை விற்பனை செய்யும் முச்சக்கரவண்டிகளுக்கான விசேட பரிசோதனையும், விற்பனையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நேற்று இடம்பெற்றது.


கொரோனா தொற்றைத் தடுக்கும் முகமாக வவுனியா சுகாதார பிரிவினர் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிநடத்தலின் பிரகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் முச்சக்கர வண்டிகள் பரிசோதனை செய்யப்பட்டன விழிப்புணர்வு கருத்தரங்கும் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பேக்கரிப் பொருள்களைக் கொண்டு செல்லும் முச்சக்கரவண்டிகளின் தரம், பொருள்களை நுகர்வோருக்கு வழங்கும் முறை, கையுறைகளின் தன்மை என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. (ம-110)

# கிளிநொச்சியில் மட்பாண்ட தொழிலாளர்களும் பாதிப்பு

கிளிநொச்சி, மே 7



மட்பாண்டங்களை விற்பனை செய்யும் இந்தக் காலப்பகுதியில், அவற்றை விற்பனை செய்ய முடியாது, தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என்று கிளிநொச்சியைச் சேர்ந்த மட்பாண்ட உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மட் பாண்டத்திலான உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெசாக் காலம் என்பதால் இராணுவத்தினர் அதிகளவான சிட்டிகளைக் கொள்வனவு செய்வார்கள். சித்திரை வருடப்பிறப்புக் காலப்பகுதியில் மக்கள் அதிகளவில் பானைகளைக் கொள்வனவு செய்வார்கள், சித்திரை பௌர்ணமி காலத்தில் மக்கள் விரதம் இருப்பார்கள் அவர்கள் கூட எமது உற்பத்திகள் கொள்வனவு செய்வார்கள்.

வேறு மாவட்டங்களில் இருந்து இங்கு வருகை தருபவர்கள் எம்மிடம் மட்பாண்ட உற்பத்திகளைக் கொள்வனவு செய்வார்கள். ஆனால் தற்போது அதற்கான அனுமதிகள் இல்லாத காரணத்தால் இன்று உற்பத்திப்பொருள்கள் உற்பத்தி நிலையத்திலேயே தேங்கிக் கிடக்கின்றன. இதனால் எமக்கு லட்சக்கணக்கில் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே எங்களுடைய நிலையையும் உரியவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். எமது வாழ்வாதாரமும் இன்று முடக்கப்பட்டுள்ளது - என்றனர். (ஐ-6,113)

## வழிமறித்து வாள்வெட்டு; குடும்பஸ்தர் படுகாயம்

வாள்வெட்டுக்கு இலக்காகிய குடும்பஸ்த்தர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கெற்பேலிப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்த்தர், தோட்டத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் போது, வழிமறித்தவர்கள், அவரை வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. வாள்வெட்டுக்கு இலக்கான அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை

# திங்கள் முதல் வவுனியாவில் சில நடைமுறைகள் அமுலில்

*நகரசபை தவிசாளர் அறிவிப்பு*

வவுனியா, மே 7

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் சில நடைமுறைகளை நடைமுறைப்படுத்தவுள்ளோம் என்று வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

நடைமுறைப்படுத்தவுள்ள புதிய நடைமுறை தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் அச்சத்தையடுத்து ஊரடங்கு தளர்த்தப்படும் சமயங்களில் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வவுனியா நகரில் பல பகுதிகளில் விசேட இடங்கள் ஒதுக்கப்பட்டு பரவலான முறையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கியிருந்தோம். தற்போது மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்படுவதால், வீதியோரங்களில் மரக்கறி வியாபாரம் செய்வதற்கு மாத்திரம் அனுமதி வழங்குவதுடன் கோழி, மீன், அத்தியாவசியமற்ற பொருள்கள் என்பவற்றை விற்பனை செய்வதற்குரிய அனுமதிகள் எதிர்வரும் 11ஆம் திகதியுடன் நிறுத்தப்படும், உள்ளூர் உற்பத்தியாளர்களின் மரக்கறிகள் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை வீதியோரங்களில் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார். (ப-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்



பிரித்தானியா சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம் வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பூடாக வறுமைக்குட்பட்ட 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது. (ம)




மெல்பேர்ண் வாழ் உறவுகளின் பங்களிப்பின் மூலம், அறிவுச்சோலை மற்றும் செஞ்சோலை காப்பகங்களில் பராமரிக்கப்பட்ட சிறார்களின் வவுனியா காப்பகத்துக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-222)



கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் குழந்தைகளைக் கொண்ட 35 குடும்பங்களுக்கு இளவாலை வருத்தப்பட்ட வாலிபர் சங்கத்தினரால் பால்மாப்பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)



கிளிநொச்சி பூநகரி சிறிவிக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியர்கள், அதிபர் மற்றும் யாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் (நோர்வே) ஆகியோரின் நிதி உதவியில் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 100 வறிய மாணவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள திருநகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 15 குடும்பங்களுக்கு நன் கொடையாளர் கி. ஆ. விநோதனின் நிதி உதவியில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)



வத்திராயனில் உள்ள 30 குடும்பங்களுக்கு உதய சூரியன் உதவும் கரங்கள் அமைப்பால் ஐந்தாம் கட்டமாக உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-23)



தெல்லிப்பழை இளைஞர் கழக சம்மேளனத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் 'விதை சிறிது விடை பெரிது' எனும் தொனிப்பொருளிலான மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் தொடர்ச்சியாக மல்லாகம் கும்பளை குளக்கரைப் பகுதியில் மலை வேம்புக் கன்றுகள் நடப்பட்டன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல இடங்கள் தனிமையாகின

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்ட பின்னர் ராஜகிரிய, கொலன்னாவ, கண்டி உள்ளிட்ட பகுதி கொலொம்பிச மற்றும் மோதரையில் ஓர் அடுக்குமாடி குடியிருப்பு ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் கொலொம்பிச வில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேர், ராஜகிரியவின் பண்டாரநாயக்கபுரவில் 29 பேர், கொலன்னாவ பகுதியில் 27 பேர், மோதரை அடுக்குமாடி குடியிருப்பைச் சேர்ந்த 15 பேர் என மொத்தம் 138 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் புனானை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

இதேவேளை ஜாஎலவில் உள்ள சுதுவெல்ல, கிராண்ட்பாஸில் நாகலகம் தெரு, அபயபுர மற்றும் பொலநறுவையிலுள்ள சோமபுர, குருண்டுவட்ட மற்றும் நாரஹென்பிட்ட உள்ளிட்ட ஆறு நகரங்கள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவை குறுகிய காலத்துக்குள் விடுவிக்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (த)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த முன் தேர்தல் நடத்தவேண்டுமாயின் நடவடிக்கை பற்றி ஆலோசனை

கொழும்பு, மே 7

கோவிட் - 19 தொற்றுநோய் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால் மேற்கொள்ளப்படவேண்டிய சுகாதார நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகள் மற்றும் வாக்காளர்களுக்கு கையுறைகள் மற்றும் முகக் கவசங்கள் வழங்கவேண்டியது கட்டாயம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கோவிட் - 19 வைரஸ் பரவலால் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கடந்த மார்ச் 20ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும், சுகாதாரத் தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இது குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைக்க குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இதில் தொற்றுநோயியல் நிபுணர்கள், தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள், தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர், இடர் முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம், அரச பொது நிர்வாக அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் கொவிட் 19 ஒழிப்புப் படையணியின் உறுப்பினர் ஒருவரை உள்ளடக்கியதாக இந்தக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு பல பரிந்துரைகளை முன் வைத்துள்ளது.


இதேவேளை, பொதுத் தேர்தலை ஜுன் மாதம் 20 ஆம் திகதி நடத்துவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் அரசமைப்புக்கு எதிரானது என்று தீர்ப்பளித்து அதனை சட்டபூர்வமற்றதாக்குமாறுகோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (த)

# பறித்து எரிக்கப்படுகிறன வெற்றிலை பாக்குகள்

## நெடுந்தீவில் இப்படிச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 7

**யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் விற்பனை செய்யப்படும் வெற்றிலை, பாக்கு நெடுந்தீவில் மட்டும் பறிமுதல் செய்யப்பட்டு கொளுத்தப்படுகின்றன என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.**



நெடுந்தீவிலுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வெற்றிலை, பாக்கு இருப்பின் பொதுச் சுகாதார பரிசோதகர் அவற்றைப் பறிமுதல் செய்கின்றார். அவர் அவற்றை நீதிமன்றில் முற்படுத்தாது பிரதேச சபைத் தவிசாளர் முன்பாக தீயிட்டு எரிக்கின்றார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல இடங்களிலும் இவை விற்பனைசெய்யப்படுகின்றன. நகரப் பகுதியில் நூற்றுக்கணக்கான வெற்றிலை கடைகளிலும் குடாநாட்டின் சகல சந்தைகளிலும் பாவனையில் உள்ளன, விற்கப்படுகின்றன என்றும் அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி நெடுந்தீவு பொதுச் சுகாதார உத்தியோகத்தரின் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவான வேலணை சுகாதார மருத்துவ அதிகாரியிடம் கேட்டபோது, சட்டத்தின் பிரகாரம் வெற்றிலை, பாக்கு விற்பனை செய்யமுடியாது. இந்தச் சட்டத்தை அதிகம் பேர் நடைமுறைப்படுத்துவது கிடையாது. ஆனால் நெடுந்தீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றார் - என்றார். (த-105)

# காதலியின் தந்தையை கொன்றார் காதலன்

கொழும்பு, மே 7

முரண்பாட்டால் காதலியின் தந்தையை கோடரியால் தாக்கி கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் 21 வயதான இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, ஹாலிஎல நாரங்கல 9 ஆம் கட்டை தெப்பத்தபத்தனை பிரதேசத்தில் நேற்றுஅதிகாலை சம்பவம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த 38 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், கொலை செய்யப்பட்ட நபரின் 15 வயதான மகளைக் காதலித்து வந்துள்ளார். பின்னர் அந்தப் பெண்ணைக் கடத்திச் சென்றார் என்று முன்னர் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையாகியிருந்தார்.

இந்த நிலையில், பெற்றோரின் விருப்பத்துக்கு அமைய குறித்த பெண்ணை சந்தேகநபர் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயினும், கொலை நடந்த பின்னர், கொலைசெய்யப்பட்டவரின் மனைவி, மகள் மற்றும் சந்தேகநபர் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

கொலையான நபரின் மனைவி, சந்தேகநபரையும் மகளையும் சந்தேகநபரின் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்றும் கணவன் பிள்ளைகளைத் தாக்கியதால்தான் கொலை செய்யப்பட்டார் என்றும் கூறியுள்ளார்.

எனினும், சம்பவ இடத்துக்குச் சென்ற பதுளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ஹாலி - எல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் நடத்திய விசாரணையில், மகளுடன் வாழ்ந்து வந்த இளைஞரே இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபரை கைதுசெய்த பொலிஸார், கொலை செய்யப் பயன்படுத்திய கோடரியையும் கைப்பற்றியுள்ளனர். சம்பவம் குறித்து ஹாலி - எல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# மது நிலையங்கள் திறந்தாலும் விற்பதற்கு சாராயம் இல்லை

## *கலால் திணைக்களம் தெரிவிக்கின்றது*

கொழும்பு, மே 7

ஜுன் 11ஆம் திகதிக்குப் பின்னர் மதுபானசாலைகள் திறக்கப்பட்டாலும், மதுபானங்களை விற்பதற்கு இரண்டு மாவட்டங்களில் போதுமான அளவு, மதுபானங்கள் கையிருப்பில் இல்லை என்று கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் கடந்த 20ஆம் திகதியன்று மதுபானசாலைகள் திறக்கப்பட்டன. இதன்போது, இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள மதுபான சாலைகளில் கையிருப்பில் இருந்த மதுபானங்கள் யாவும் விற்றுத் தீர்க்கப்பட்டு விட்டன.

இந்த நிலையில் 11ஆம் திகதியன்று மதுபானசாலைகள் திறந்தாலும் விற்பதற்கு மது இல்லை என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# தரம் 5 மாணவர்களுக்கு இணைய வழிப் பரீட்சை

கொடிகாமம், மே 7

தரம் 5 மாணவர்களுக்கான இணைய வழிப் பரீட்சைகள் வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் நடத்தப்படும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தரம் 5 மாணவர்களுக்கான மாதிரி பரீட்சையை இணையவழிப் பரீட்சையாக நடத்த மாகாணக் கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது. அதன்படி அடுத்த பரீட்சை எதிர்வரும் 9ஆம், 15ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது. இதற்கு மாணவர்கள் வீட்டில் இருந்தவாறே விரும்பிய நேரங்களில் தோற்றமுடியும். வினாத்தாள் 1க்குரிய திருத்தம் இணையத்தின் மூலம் நடைபெறும். வினாத்தாள் 2க்குரிய விடைகள் வரும் 11ஆம் திகதியன்று வெளியிடப்படும் என சகல பாடசாலை அதிபர்களுக்கும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ப-159)

# அத்துமீறும் 'வெசாக்' விற்பனையாளர்களால் கொரோனா பெருந்தொற்றாக மாறும் அச்சம்


பல்வேறு தடைகளையும் மீறி கொழும்பில் ஆங்காங்கே வெசாக் விளக்குகள், அலங்காரங்கள் என்பன விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் கொரோனா 'பெருந்தொற்றாக' மாறும் வாய்ப்பு உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக நாடெங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் வெசாக் கொண்டாட்டங்களை வீடுகளுக்குள் மட்டுப்படுத்திக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், சில விற்பனையாளர்கள் கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் வெசாக் விளக்குகள் மற்றும் அலங்காரங்களை விற்பனை செய்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் நிலை மிக ஆபத்தாக உள்ள பகுதிகளில் கொழும்பும் ஒன்றாகும். இதனால் இவ்வாறான வர்த்தக நடவடிக்கை களால் கொரோனா தொற்று 'பெருந்தொற்றாக' மாறும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிட்டனின் வர்த்தக துறை அமைச்சராக இலங்கையர்!



லண்டன், மே 7
பிரிட்டனின் வர்த்தகத் துறை அமைச்சராக இளையவரான இலங்கையரொருவர் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

33 வயதான ரணில் ஜெயவர்த்தன என்பவரே அவ்வாறு பிரிட்டனின் அமைச்சரவையில் இடம்பிடித்துள்ளார்.

'இந்த முக்கியமான தருணத்தில் வர்த்தகத்துறை அமைச்சராக செயற்படுமாறு நியமிக்கப்பட்டுள்ளமை பெரும் பாக்கியம்' என்று ரணில் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். (ம)

### இனவாதிகளை இயக்குகின்ற

## ராஜபக்சக்கள் நினைத்தால் தீர்வு கிடைப்பது உறுதியே

### எனினும் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேறாது என்கிறார் சஜித்

'நல்லாட்சி அரசில் அரசியல் தீர்வுக்கான புதிய அரசமைப்பு மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை ஆகிய விவகாரங்களைக் குழப்பியடித்தவர்கள் ராஜபக்ச அணியினரேயாவர். அவர்கள்தான் இனவாதிகளையும் இயக்கி தீர்வு விடயங்களுக்கு எதிராக வெளியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தச் செய்தார்கள். எனவே, ராஜபக்சக்கள் நினைத்தால் தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்க முடியும். ஆனால், ராஜபக்சவினர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வெறும் வாக்குறுதிகளைத்தான் வழங்குவார்கள். அதனை ஒருபோதும் அவர்கள் நிறைவேற்றவே மாட்டார்கள். இது கடந்த கால வரலாறு. இனியும் அவ்வாறுதான் நடக்கும்' இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அலரி மாளிகைக் கூட்டத்தில் கலந்துகொண்ட இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவர்களை தனது வீட்டுக்கு அழைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச, அரசியல் கைதிகள் விடயம், காணி விடுவிப்பு, புதிய அரசமைப்பு மற்றும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் பல வாக்குறுதிகளையும் வழங்கியுள்ளார்.

இந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நாடாளுமன்றத்தில் ராஜபக்ச அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அதை மறந்தேவிடும். தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் ராஜபக்சக்கள் நிறைவேற்றியதாக வரலாறு இல்லை.

ஆனால், நல்லாட்சி அரசின் காலத்தில் நாம் அரசியல் தீர்வு விடயம், அரசியல் கைதிகளை முழுமையாக விடுவித்தல் ஆகிய இரண்டு பிரச்சினைகளையும் தவிர்த்து தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தோம். படையினர் வசமிருந்த பெருமளவிலான காணிகளை விடுத்தோம். ராஜபக்சவினரும் இனவாதிகளும் குழப்பியடிக்காவிட்டிருந்தால் புதிய அரசமைப்பு நிறைவேறியிருக்கும். அரசியல் கைதிகள் அனைவரும் சிறைகளிலிருந்து வெளியே வந்திருப்பார்கள்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எமது கூட்டணி நாடாளுமன்றத்தில் ஆட்சிக்கு வந்தால் கடந்தகால அனுபவங்களைக்கருத்தில்கொண்டு இனவாதிகளினதும் ராஜபக்சக்களினதும் வாய்களுக்குப் பூட்டுப் போடுவோம். மூவின மக்களின் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்போம். சமவுரிமையிலான தீர்வை வழங்கிவைப்போம்'- என்றார். (ம-22)

### ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரான் கும்பலின்

# மனித வெடிகுண்டுகளாக பல அநாதைப் பிள்ளைகள்

### விசாரணையில் அரபுக் கல்லூரி மாணவர்கள் அதிர்ச்சித் தகவல்

**கொழும்பு, மே 7**

**இலங்கையில் கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியாகச் செயற்பட்டார் என நம்பப்படும் சஹ்ரான் ஹாசீமின் கும்பல், புத்தளம் வனாத்துவில்லுவில் பகுதிகளில், பெற்றோரை இழந்த அநாதரவான பிள்ளைகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி, அவர்களை மனித வெடிகுண்டுகளாக சமூகமயப்படுத்தத் திட்டமிட்டிருந்தது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள விசாரணைகளில் தெரியவந்துள்ளது.**

இதற்காக சஹ்ரானின் சகோதரனான சாய்ந்தமருதில் தற்கொலை செய்துகொண்ட ரில்வான், வனாத்துவில்லு பகுதியில் உள்ள அரபுக் கல்லூரிக்குச் சென்று ஆயுதம் மற்றும் கைக்குண்டு பயன்பாடு குறித்து பயிற்சி கொடுத்து, அந்நிய மதத்தவர்களைக் கொலை செய்ய தமக்குப் போதனை செய்ததாக அந்த அரபுக் கல்லூரி மாணவர்கள் சி.ஐ.டி. விசாரணைகளில் வெளிடுத்தியுள்ளனர் என்று நான்காம் மாடித் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறு 20க்கும் அதிகமான மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் நிலையில், அதில் 12 பேரிடம் இதுவரை சி.ஐ.டியினர் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துகொண்டுள்ளனர் என்று அறியமுடிந்தது.

இவ்வாறான பின்னணியிலேயே, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் புத்தளம் பிரதேசத்தின் அமைப்பொன்றும் தொடர்புப்பட்டுள்ளமை தொடர்பில் சி.ஐ.டி தகவல்களை வெளிப்படுத்திக்கொண்டிருந்த நிலையில் அதன் பொறுப்பாளராகச் செயற்பட்ட நபர், கடந்த 3ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், அவர் நடத்தி வந்த அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அலுவலகம் ஒன்று, கொழும்பு 15, மட்டக்குளி பகுதியில் பள்ளிவாசல் ஒன்றின் 2ஆம் மாடியில் உள்ள அறையொன்றில் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டுள்ளது. கடந்த 4ஆம் திகதி சி.ஐ.டியினரால் அந்தப் பள்ளிவாசல் அறை அதிரடியாகச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது அங்கிருந்து பல ஆவணங்கள், குறித்த அமைப்புக்கு நிதி வழங்கியவர்கள் குறித்த பற்றுச் சீட்டுக்கள் உள்ளிட்டவை சி.ஐ.டியால் மீட்கப்பட்டன எனவும், தற்போது அவ்வறைக்கு சீல் வைக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரியவந்துள்ளது.

இதில் கைதுசெய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனப் பொறுப்பாளர், பெற்றோரை இழந்த 24 பிள்ளைகளை கொழும்பிலிருந்து அழைத்துச் சென்று, குறித்த அரபுக் கல்லூரிக்கு கையளித்துள்ளமை தொடர்பில் தகவல்கள் உள்ளன எனவும், அது குறித்துதீவிர விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் நான்காம் மாடித் தகவல்கள் கூறின.

குறித்த நபர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர், தற்போது வரைக்கும் 24 பிள்ளைகளில் 12 பிள்ளைகளைக் கண்டறிந்து சி.ஐ.டியினர் வாக்குமூலம் பெற்றுள்ளனர் எனவும், அவர்கள் அனைவரும் 12 முதல் 15 வயதுகளுக்கு இடைப்பட்ட சிறுவர்கள் எனவும் அந்தத் தகவல்கள் கூறின.

குறித்த அநாதரவான பிள்ளைகளுக்கு, வனாத்துவில்லு காரை தீவு வீதியில் 6 ஏக்கர் விஸ்திரமான இடத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அது குறித்த மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-22)

### ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

# அரசியல்வாதிகள் எவரும் உரிமை கோர முடியாது

யாழ்ப்பாணம், மே 7

தற்போது ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைமை காரணமாக சமூக நன்மைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பில் எந்தவொரு அரசியல் தரப்பினரும் உரிமை கோர முடியாது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தக் கொடுப்பனவு பொது மக்களாகிய உங்களது வரிப்பணத்தில் வழங்கப்படுபவையாகும். இதற்கு எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ உரிமை கோர முடியாது. இது தொடர்பில் பொதுமக்கள் எந்த அரசியல் கட்சியுடனோ அல்லது வேட்பாளருடனோ விசேட பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. இது தொடர்பான விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகள் இருப்பின் பொதுமக்கள் தமது பிரதேச செயலகத்தையோ மாவட்டச் செயலகத்தையோ அணுக முடியும்.

மேலும் இந் நிவாரண நடவடிக்கைகளை கையாள்வதற்கு கிராம மட்டத்தில் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் பிரதேச மட்டத்தில் பிரதேச செயலர்களும் பொறுப்பாக இருப்பார்கள், என்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன், அரசின் உதவிகள் கிடைக்காதவர்கள் தமது அமைப்பாளர்களைத் தொடர்பு கொள்ள முடியும் என்று முகநூலில் விளம்பரப்படுத்தியிருந்தார் என்பது நினைவில் கொள்ளத்தக்கது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமைத்துவத்தில் சிறந்தவர் ஸ்ரேயாஸ்

## அக்சர் சொல்கின்றார்

புதுடெல்லி, மே 7
ஸ்ரேயாஸ் சிறப்பான தலைவர். டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை அவர் சிறந்த முறையில் வழிநடத்துகின்றார் என்று தெரிவித்துள்ளார் சுழலந்து வீச்சாளர் அக்சர் பட்டேல்.
டெல்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நான் இந்திய அணிக்காக விளையா டும் போது ஸ்ரேயாஸுடன் இணைந்து விளையாடியுள்ளேன். நான் டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு வரும்போது, மிகவும் எளிதாக இருந்தது. ஏனென்றால், நாங்கள் ஒருவருக்கு ஒருவரை நன்றாக தெரிந்து வைத்துள்ளோம். மைதானத்தில் எனக்கு சுதந்திரம் கொடுத்து நான் விரும்பும் வகையில் களத்தடுப்பு அமைக்க ஸ்ரேயாஸ் வழிவகை செய்தார். அவர் மிகவும் அமைதியானவர். அவருக்கு கீழ் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடி வருகிறேன்" என்றார். (ம)



# ரி20 வகை ஆட்டங்களை 2 இன்னிங்ஸாக்குவதா?

## பிரட் லீ, கம்பீர் விமர்சனம்

புதுடெல்லி, மே 7
ரி20 ஆட்டங்களை இரண்டு இன்னிங்ஸ்களாகப் பிரிக்கும் திட்டத்தை இந்திய அணியின் முன்னாள் வீரரான கம்பீர், ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரான பிரட் லீ ஆகியோர் கண்டித்துள்ளனர்.
ரி20 ஆட்டங்களை இரண்டு இன்னிங்ஸ்களாகப் பிரிப்பது தொடர்பில் ஐ.சி.சி தற்போது பரிசீலித்து வருகின்றது. சச்சின் ரெண்டுல்கர் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டங்களை 25 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இரு இன்னிங்ஸ்களாக பிரிக்கலாம் என்று கூறியிருந்தார். இது எதற்காகவெனில், நாணயச் சுழற்சிச் சாதகம் ஒருதலைப்பட்சமாக மாறிவிடுகிறது என்பதாலும் பகலிரவு போட்டிகளில் ஒரு அணி பகலில் முழுதும் விளையாட ஒரு அணி இரவில் முழு விளக்கொளியில் விளையாடுவது ஒருதலைப்பட்சமானது என்பதாலும்தான்.
ஆனால் ரி20 கிரிக்கெட்டை இன்னும் உடைத்தால் அது என்னவாகும்? ஐ.சி.சியின் இந்தப் பரிசீலனை தொடர்பில் பிரெட் லீ தெரிவித்ததாவது, 'ஐபிஎல் ஆகட்டும் பிக்பாஷ் ஆகட்டும் சர்வதேச ரி20 ஆகட்டும் இதேபோன்று தொடர்வதில் தான் சுவாரசியம் இருக்கும். இதுதான் ரசிகர்களை அதிகளவில் ஈர்க்கும். கிரிக்கெட்டில் சில விஷயங்களை மரபான முறையில் தான் வைத்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ரி20 கிரிக்கெட்டை 4 இன்னிங்ஸ்களாகப் பிரிக்கும் யோசனை முழுவதும் தவறானது. இது கிரிக்கெட் மரபுக்கு முரணானது - என்றார்.
கம்பீர் தெரிவித்ததாவது, 'ஒருநாள் கிரிக்கெட்டை 25 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இன்னிங்ஸ்களாகப் பிரித்தால், நாணயச் சுழற்சி என்பதை கணக்கிலிருந்து எடுத்து விடும்.
ஏனெனில் சில இடங்களில் நாணயச் சுழற்சி வெற்றி தோல்வியை பெரிய அளவில் தீர்மானித்து விடும். எனவே ஒருநாள் கிரிக்கெட் டுக்கு இதுசரி. ஆனால் டி20 கிரிக்கெட்டே ஒரு குறுகிய வடிவம், இதற்கு கால அவகாசமே இல்லை. இதைப் போய் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இன்னிங்ஸ்களாகப் பிரித்தால் இன்னும் குறுகி விடும்' - என்றார். (ம)

# பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பாரபட்சங்கள்

## அசிப் குற்றச்சாட்டு



இஸ்லாமபாத், மே 7
பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பாரபட்சம் பார்க்கப்படுகின்றது - என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அந்த அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டவருமான அசிப்.
பாகிஸ்தான் அணி லோட்ஸ் மைதானத்தில் விளையாடும்போது அந்த அணியின் தலைவர் சல்மான் பட், வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது அசிப், முகமது அமிர் ஆகியோர் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் ஐ.சி.சியால் தண்டனை பெற்றனர். முகமது அசிப்புக்கு 7 வருடங்களும் சல்மான் பட், முகமது அமிர் ஆகியோருக்கு தலா ஐந்து வருடங்களும் தடைவிதிக்கப்பட்டன.
அமிர் தடைக்குப்பின் மீண்டும் சர்வதேச அணிக்கு திரும்பினார். சல்மான் பட் சர்வதேச அணிக்கு திரும்பவில்லை என்றாலும் பாகிஸ்தான் பிரிமீயர் லீக்கில் விளையாடினார். முகமது அசிப்புக்கு மட்டும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை என்னை இன்னும் சிறப்பான வகையில் கையாண்டிருக்கலாம் என முகமது அசிப் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து முகமது அசிப் தெரிவித்ததாவது: "ஒவ்வொருவரும் தவறு செய்தனர். நானும் செய்தேன். எனக்கும் முன்பும், எனக்கு பின்பும்கூட ஆட்ட நிர்ணயங்கள் நடைபெற்றுள்ளன. எனக்கு முன்பு உள்ளவர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில் பணிபுரிந்து வருகிறார்கள். எனக்கு பின்பு ஈடுபட்டவர்கள் தற்போது அணியில் விளையாடி வருகிறார்கள். ஒவ்வொருவருக்கும் 2ஆவது வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் என்னைப் போன்ற சில பேருக்கும் மட்டும் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. உலகளவில் தலைசிறந்த பந்து வீச்சாளராக இருந்த என்னைக் காப்பாற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எந்த வொரு முயற்சியும் எடுக்கவில்லை" என்றார். (ம)




# உலகக்கிண்ணத்தை பிற்போட வேண்டும்

## றோய் வலியுறுத்தல்

லண்டன், மே 7
வீரர்கள் போட்டிக்கு தயாராகும் நிலையை எட்டவில்லை என்றால் ரி20 உலகக் கிண்ணத் தொடரைத் தள்ளி வைக்கலாம் என ஜேசன் றோய் தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலியாவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக செப்ரெம்பர் மாதம் வரை எல்லை மூடப்பட்டுள்ளது.
அதன்பின் ஒக்டோபர் 3ஆவது வாரத்தில் ரி20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெற இருக்கிறது. கொரோனா வைரஸ் தொற்று இன்னும் முடிவுக்கு வராததால் போட்டி நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.
இதுகுறித்து ஜேசன் றோய் தெரிவித்ததாவது:
"சரியான வகையில் வீரர்கள் தயாராகாமல் ஆஸ்திரேலியா செல்ல முடியாத நிலை ஏற்பட்டால், அப்போது ரி20 உலகக்கிண்ணத் தொடரைத் தள்ளி வைப்பதற்கான அர்த்தம் உள்ளது. ரி20 போட்டிக்கு தயாராவதற்கு குறைந்தது மூன்று வாரங்கள் தேவைப்படும். நாம் தயாராகுவதற்கு இந்த நாட்கள் தேவை என்பதை அனைத்து வீரர்களும் வலியுறுத்த வேண்டும்" என்றார். (ம)

# 3 வடிவ ஆட்டங்களிலும் விளையாடுவதற்கு தயார்

## டுபிளஸி விருப்பம்



ஜோகன்ஸ்பார்க், மே 6
கிரிக்கெட் ஆட்டங்கள் மீண்டும் ஆரம்பமான பின்னர் தென்னாபிரிக்க அணிக்காக மூன்று வடிவ ஆட்டங்களிலும் விளையாடுவ தற்குத் தயாராக உள்ளேன் என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவரான டுபிளஸி.
இது தொடர்பில் டுபிளஸி மேலும் தெரிவித்ததாவது:
தென்னாபிரிக்க அணிக்காக கிரிக்கெட் விளையாடுவதை தற்போதுவரை விரும்புகிறேன். அணிக்கு என்னால் பெருமை சேர்க்க முடியும் என்பதை நம்புகின்றேன். மூன்று வடிவிலான கிரிக்கெட்டிலும் விளையாட மிகவும் உத்வேகமாக இருக்கிறேன்.
தற்போது கிரிக்கெட் இல்லாமல் வீட்டில் இருக்கும் இந்த நேரம், இன்னும் அதிகமாக கிரிக்கெட் போட்டிகளில் விளையாட வேண்டும் என்ற பசியை தூண்டியுள்ளது" என்றார். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.